Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி –03 | 19–08–2004 | வியாழக்கிழமை | ஓசை –183

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10122)

# வாழைச்சேனை நகர்ப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல்!

## அதிகாலையில் இருந்து நண்பகல்வரை இராணுவம்–பொலிஸ் கூட்டு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

**சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டாக இணைந்து வாழைச்சேனை நகர்ப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். அதிகாலையிலிருந்து நண்பகல்வரை நடைபெற்ற இத்தேடுதல் வேட்டையில் வீடுகளும், வீதியால் சென்ற வாகனங்களும் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.**

வாழைச்சேனைப் பகுதிக்குள் வந்த அனைத்து வாகனங்களும், வாழைச்சேனை பகுதியில் இருந்து வெளிச் சென்ற வாகனங்களும் படைத்தரப்பினரால் கடுமையாக துருவித் துருவி சோதனை மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் வீடுகளிலும் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. பிற்பகல் ஒருமணி வரை நடாத்தப்பட்ட பாரிய தேடுதலின் போது இரு உந்துருளிகளை படைத்தரப்பினர் எடுத்துச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை யாராவது கைது செய்யப்பட்டார்களா என்பது குறித்து எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

பெரும் தொகையாகப் படையினரும் பொலிசாரும் இவ்வாறு சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டமை போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் ஆயுதக்குழு வொன்றின் உறுப்பினர்களும் இத்தேடுதலில் ஈடுபட்டதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் போது பொதுமக்களிடம் விடுதலைப்புலிகளின் தொடர்புபற்றியும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத்திற்கு துணை போகும் குழுக்களுடனான தொடர்புபற்றியும் விசாரித்ததாகவும் நகரவட்டாரங்கள் தெரிவித்தன. இந் நடவடிக்கையின் போது அப்பகுதியில் அமைந்துள்ள சில முஸ்லிம் மக்களின் வீடுகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.


## கண்காணிப்புக்குழு விசாரணை

முல்லைத்தீவு கடற்பரப்பில் பயணித்த றோலர் படகு தொடர்பான விசாரணைகளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆரம்பித்துள்ளதென யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் பெராக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலா? என்பது குறித்து தெளிவாகக் கூறமுடியாதென அவர் மேலும் தெரிவித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் இரத்தினத்திற்கு யாழ்.குடாநாட்டில் இறுதி அஞ்சலி



நாட்டுப்பற்றாளர் திரு.இரத்தினம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டிருந்த மக்களில் ஒருபகுதியினரையும், இளம்பரிதி அவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- செல்வா)

கடந்த 15.08.2004 சுகயீனம் காரணமாக சாவடைந்த நாட்டுப்பற்றாளர் செ.இரத்தினம் அவர்களின் இறுதி நிகழ்வுகள் நேற்று அவரது இல்லத்தில் இடம்பெற்று மாலை 4.30 மணியளவில் ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்காக அவரது வித்துடல் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர் பகீரதன் தலைமையில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றிய செயலாளர் சிவகரன், யாழ் (14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளேன்

### - சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை தடுக்க தாம் உரிய பணிப்புரைகளை பாதுகாப்பு படையினருக்கு விடுத்துள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பு குறிப்பாக கொழும்பின் பாதுகாப்பு தொடர்பில் தாம் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தாம் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் போது சுமார் 300 தமிழீழ விடுதலைப்புலிகள் கொழும்பில் தாக்குதலுக்காக பிரவேசித்திருப்பதான தகவல் குறித்து தமது அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திர கட்சியின் வளர்ச்சியை ஏவராலும் தடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கிய போதே அதன்மூலம் சிறிலங்கா சுதந்திர (14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தன்னாமுனையில் சிறிலங்கா புலனாய்வுத் துறையால் கைதான இருவரின் நிலை தெரியவில்லை

கொழும்பிலிருந்து சென்ற சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூவா கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னாமுனையைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஜெயக்குமார் (25)வயது, அருமைநாயகம் ஜெயசீலன் (28)வயது, மட்டக்களப்பு ஜயந்திபுரம் எக்டர் றெஜினோல்ட் சில்வா ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த 11ஆம் திகதி அதிகாலை தெமட்டகொடவிலிருந்து வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைது செய்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரத சேவையை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் புகையிரதசேவையைத் தனியார் மயப்படுத்தல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முந்நூறிற்கு மேற்பட்ட புகையிரத சேவை ஊழியர் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர். 32 சங்கங்களை உள்ளடக்கிய இணைந்த புகையிரதசேவைத் தொழிற்சங்கம், புகையிரத அதிகார சபையின் செயற்பாட்டை ரத்துச் செய்யும்படி அர (14ஆம் பக்கம் பார்க்க)



## தலை மன்னாரில் 7 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு

(மன்னார்)

தலைமன்னாரில் கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்று வீடுதிரும்பிய 7 வயதுச் சிறுமி, ஒருவரினால் கடத்திச் செல்லப்பட்டு பழைய குடிசையொன்றினுள் வைத்து பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்ததப்பட்டுள்ளார் இதன்போது சிறுமியின் சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு சென்ற வேளை குறிப்பிட்ட நபர் தப்பிச் சென்று (14ஆம் பக்கம் பார்க்க)

## தன்னியங்கி ஏவுகணைகள் சிலாபம் பகுதியில் மீட்பு

(கொழும்பு)

சிலாபம் மாரவிலப் பகுதியில் உள்ள மட்டக்கொட்டுவ என்ற இடத்தில் ஐந்து தன்னியங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று இந்த ஏவுகணைகள் மீட்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர். அண்மையில் நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து விபத்துக்குள்ளான வான் படைக்குச் சொந்தமான மிக்ரக வானூர்தியில் இருந்த ஏவுகணைகளே இவை (14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் அ.அட்டை கோருவதற்கு முன் தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கவேண்டும்

### - ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் ஒன்றில் அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவது. என்பதற்கு முன்னர் அரசாங்கம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினா ஜி. எல். பீரிஸ் தேர்தல் ஒன்று தற்போதைய நிலையில் அவசரமாக வரப்போவதில்லை. எனில் அரசாங்கம் இந்த பிரேரணையை ஏன் அவசரமாக நிறைவேற்ற வேணடும் என அவர் கேள்வி எழுப்பினா தொடர்ந்து அங்கு,

(14ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சான்றிதழ் வழங்கல்

NITM.கணினிப் பயிற்சி நிலையத்தில் இதுவரையில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்கள் எதிர்வரும்20/08/04 முன்னர் தமது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். Director NITM:-புதுக்குடியிருப்பு. (4681)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

### மகா கும்பாபிசேகம்

மூதூர் கிழக்கு, சேனையூர் ஸ்ரீவருணகுல விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. திருமலை பத்திர காளியம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா பிரதமர் குருக்கள் வேதாகம மாமணி பிரமஸ்ரீசோ. இரவிச் சந்திரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருக்களாக கும்பாபிஷே கத்தை நடத்திவைப்பார். (25)

### தலைமன்னார்பகுதியில் இந்திய றோலர்கள்

தலைமன்னார் கிராமத்திற்கு தெற்குப்பக்கமாக 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மன்னார் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் 30 இற்கும் மேற்பட்ட இந்திய றோலர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தன. அவ்வேளை அதனை அவதானித்த இலங்கை கடற்படையினர் அபாய வெடிகளைக் கொழுத்தி விரட்டியடித்துள்ளனர்.

## வீதிப்பராமரிப்பு தொழிலாளர்கள் தேவை

துரித வீதிப் பராமரிப்பு வேலைகளை வவுனியா, மன்னார் மாவட்டங்களின் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் ஆவணி 1ஆம் திகதியில் இருந்து மார்கழி 31வரை மேற்கொள்வதற்காக தொழிலாளர்கள் தேவை. விரும்பியவர்கள் வவுனியா, மன்னார் நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் காரியாலயங்களில் சமயா சமய அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கீழே குறிப்பிட்ட காரியாலயங்களில் 23.08.2004 காலை 10மணி தொடக்கம் நடைபெற உள்ளது.

தொழிலாளர்களின் தரத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட வேதனம் வழங்கப்படும்.

நேர்முகப்பரீட்சைகள் நடைபெறும் இடங்கள்.

01. நிறைவேற்றுப் பொறியியலாளர்<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>கண்டிவீதி,<br>வவுனியா.

02. நிறைவேற்றுப் பொறியியலாளர்<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>மன்னார்.

எந்திரி: வே.தர்மகுலசிங்கம்,<br>மா.காணிப்பணிப்பாளர் அவ-கி(வ)<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை<br>வவுனியா.

(சி-9794)

## சாவு அறிவித்தல்



### இராமநாதன் இந்திரகௌரி


நெடுங்கேணிவாழைத்தோட்டம்17ஆம்கட்டையைப் பிறப்பிடமாகவும், அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் இந்திரகௌரி 18.08.2004 ஆம் நாள் காலமாகி விட்டார்.இவர் காலஞ்சென்ற முன்னாள் இலங்கை போக்குவரத்துச்சபை சாரதி இராமநாதன் தேவமலர் ஆகியோரின் அன்பு மகளும், தீபா, ஜெகன், தனுஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும், பத்மநாதன் (கனடா), லோகநாதன் (ப.நோ.கூ.சங்கக்கிளை முகாமையாளரும்), ரகுநாதன் (அஞ்சலகம் நெடுங்கேணி), காலம் சென்ற பரமநாதன், செல்வநாதன் (அஞ்சலகம் நெடுங்கேணி), கமலாவதி, மயாவதி, இந்திராணி, அம்பிகாவதி ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற புஷ்பகாந்தி, கமலாதேவி, சறோசாதேவி, சந்திராதேவி (ஆசிரியை வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி), வசந்தாதேவி (ஜேர்மன்), இலட்சுமிதேவி (ஜேர்மன்), புஷ்பமாலா (லண்டன்), தேவபாலன், தர்மபாலன் ஆகியோரின் மருமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19.08.2004 இன்று பி.ப.2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, புகளுடல் மாமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:-<br>ரகுநாதன் (சித்தப்பா)

(4976)

## 31ஆம் நாள் நினைவலையில்

மண்மகிழ<br>01<br>-<br>07<br>-<br>1939



மனம்<br>நெகிழ<br>20<br>-<br>07<br>-<br>2004

### அமரர் கோவிந்தர் பெரியதம்பி

முகாவில் இயக்கச்சி

அன்புள்ள அப்பாவே தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் ஒருங்கிணைந்து என்னை வழிப்படுத்திய தெய்வமே நான் வாழும் காலம் எல்லாம் நலமுடன் நீங்கள் வாழவே நான் இங்கு வந்தேன்.

பொன்னான புத்திமதிகள் அடிக்கடி கூறிடுவீர்கள் தெய்வமென அதைக்கேட்டு ஆற்றிடுவேன் என்பணியை நாலாண்டு நானுங்கள் முகம் காணாத் துன்பத்தில் உறைந்திருந்த இந்நாளில் தங்கள் உடலேதும் கண்படாது போவதற்கு நான் செய்த பாவம் என்ன ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தென்ன உமக்கிணையாக ஆறுதல் சொல்ல ஒரு துணை இல்லையப்பா நீங்கள் இன்றி நானிலத்தில் எனக்கு வாழ்வேது சுகமேது தாங்கள் எனக்கு செய்த டனுக்கு காற்பகுதியேனும்

தங்களுக்கு ஆற்றாமையா கண்ணீரோடு வாழ்கின்றேன்,துடிக்கின்றேன், துவழ்கின்றேன், அனல்பட்ட புழுவ ாய் வற்றாத ஆழ்கடலில் வழியறியாக் கப்பலானேன் எத்தனை ஆண்டுகள் தான் சென்றிடினும் என் துயராறாது.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றேன்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் நினைவு மாறாத<br>மகன் மோகனராசன் (சிறி) குடும்பத்தினர்<br>லண்டன்

4975

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



01-08-1997ஆம் ஆண்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட

### மாவீரர் தொண்டமான்

(பெரியதம்பி சோதரராசன்)

தம்பி நீயிருந்த காரணத்தால்<br>நான்என்றும் அஞ்சவில்லை இவ்வுலகில்<br>உனக்கிருந்த தற்துணிவு தேசப்பற்று<br>உன்னைப் புலியாக்கி விடுதலையை விரைந்து பெற<br>துடிப்புள்ள போராளியாய் மாற்றிட<br>கணப் பொழுதில் எதிரிக்கு கனல் கக்கும்<br>துப்பாக்கி தனைத் தாங்கி வீறு நடைபோட்டு<br>விந்தையான போரெல்லாம் நீ புரிந்த அந்நாளில்<br>வீரனுக்கு ஏற்றால்போல நெஞ்சில் குண்டேந்தி<br>மாவீரனாய் மீளாத் துயிலடைந்தாய்<br>மண்புகழும் வீர அன்னை நெஞ்சில் நானிருத்தி<br>தம்பி தம்பி என விம்மி அழுகின்றேன்<br>நீ வர வேண்டும் மீண்டும் எனக்குத் தம்பியாக

இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

உன் நினைவு மாறாத<br>அண்ணா மோகனராசன் (சிறி)<br>குடும்பத்தினர்<br>லண்டன்

# ஜோர்ஜ் புஷ்சை வெற்றிபெறச் செய்யுங்கள் குடியரசுக்கட்சி இந்தியர்களுக்கு வேண்டுகோள்

(வேஷிங்டன்)

**“அமெரிக்க சனாதிபதி தேர்தலில் புஷ்சிற்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச்செய்யுங்கள்” என்று அங்கு வாழும் இந்தியர்களை குடியரசுக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.**

அமெரிக்காவில் சனாதிபதித் தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 4ஆம் திகதி நடக்க இருக்கிறது. இதில் குடியரசுக்கட்சி சார்பில் புஷ் போட்டியிடுகிறார். சனநாயகக் கட்சி வேட்பாளராக ஹெரி நிற்கிறார்.

புஷசிற்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச்செய்யும்படி அமெரிக்கா வாழ் இந்தியர்களை குடியரசுக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது. இது தொடர்பாக அந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரக்குழுத் தலைவர் மார்க் ரேசியாட் முதன் முறையாக ஒரு விளம்பரம் வெளியிட்டு இருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

“21ஆம் நூற்றாண்டில் சனநாயக சக்திகளில் ஒன்றாக இந்தியா உருவாக இருக்கிறது என்பதை புஷ் உணர்ந்து கொண்டார். வாஜ்பாய் அமெரிக்கா வந்தபோது அமெரிக்கா-இந்தியா இடையேயான ஒத்துழைப்புக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உயர்தொழில்நுட்பம், வர்த்தகம், ஏவுகணை பாதுகாப்பு உட்பட பலதுறைகளில் இருநாடுகளுக்கும் ஒத்துழைப்பைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று புஷ்சும், வாஜ்பாயும் அறிவித்தனர். வெற்றிபெறுவதற்கு அமெரிக்கா-இந்தியா நட்புறவுக்குப் புதிய வலுச்சேர்க்க புஷ் பாடுபட்டார். அமெரிக்கா வாழ் இந்தியர்கள் அமெரிக்காவுக்கு ஆற்றிய பங்களிப்பை புஷ் கௌரவப்படுத்தினார். புஷ்சின் பிரச்சாரத்திற்கு இந்தியர்களிடமிருந்து கிடைத்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். புஷ் மீண்டும் தேர்ந்து எடுக்கப்படுவதற்காக இந்தியர்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றோம். இவ்வாறு அந்த விளம்பரத்தில் மார்க் ரேசியாட் கூறியிருக்கிறார்.



அமெரிக்கப் படைகள், புதிதாக அமைக்கப்பட்ட ஈராக்கியத் தேசியப்படை யுத்தத்தில் ஈடுபடப் போதிய பயிற்சியில்லாமல் இருப்பதாக அறிவித்துள்ள நிலையில் ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சர் ஈராக்கியப் படைமுகாமில் உரையாற்றுகிறார்.

# கச்சா எண்ணெய் விலை உயர்வுக்கு அந்நிய நிறுவனங்களே காரணம்

## சவுதி குற்றச்சாட்டு

(குவைத்)

கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளதற்கு அந்நிய நிறுவனங்களே காரணம் என்று சவுதி இளவரசர் அப்துல்லா குற்றம் சாட்டினார். விலை உயர்வைக் குறைப்பதற்காக கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க போவதாகவும் அவர் குறிப்பிட்டார். குவைத்தில் இருந்து வெளியாகும் “அரபு டைம்ஸ்” என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். எண்ணெய் விலையைக் குறைக்க வேண்டும். அதற்காக நாங்கள் உற்பத்தியை அதிகரிப்போம். அதற்கு மேல் எங்களால் என்ன செய்ய முடியும் என்று யோசித்து வருகிறோம். எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு ரூபா.1125முதல் 1350க்குள் இருக்கவேண்டும் என்றே சவுதி அரேபியா விரும்புகிறது. சில அந்நிய நிறுவனங்கள் பெருமளவில் கச்சா எண்ணெய்யை பதுக்கி வைத்துள்ளதால் அதன் விலை கிடுகிடுவென உயர்ந்து விட்டது. விலை உயர்வுக்கு இதுவே காரணம். சாதாதரணமாக தினமும் 80 இலட்சம் பீப்பாய் எண்ணெய்யை உற்பத்தி செய்து வருகிறோம். விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக இனி தினமும் 93 இலட்சம் பீப்பாய் எண்ணெய்யை உற்பத்தி செய்ய தயாராக இருப்பதாக நாட்டின் எண்ணெய் வளத்துறை அமைச்சர் அல்-அல்னாமி சமீபத்தில் தெரிவித்தார்என்றும் அவர் தெரிவித்தார். ஈராக்கில் இருந்து எண்ணெய் ஏற்றுமதிக்கு பல முன்னணி உற்பத்தியாளர்கள் பல தடங்கல்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் கச்சா எண்ணெய்யின் விலை கிடுகிடுவென உயர்ந்தது என்றும் கூறப்படுகிறது.

# மனித வெடிகுண்டுகளுக்கு மதரீதியான த[illegible] விதிக்க வேண்டும்

## பாக்.சனாதிபதி முஷாரப்

(இஸ்லாமாபாத்)

மனிதவெடிகுண்டுகளுக்கு மதரீதியாகத் தடைவிதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் வற்புறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைக் கொலை செய்வதற்காக தற்கொலைப்படை தீவிரவாதிகள் ஏற்கனவே 2முறை முயற்சி செய்தனர். ஆனால், அதில் இருந்து முஷாரப் தப்பிவிட்டார். இந்நிலையில் தொலைக்காட்சி உரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட முஷாரப் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் இயக்கத்தைச் சேர்ந்த ‘மனித குண்டுகளுக்கு’ மதரீதியாகத் தடைவிதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

‘தற்கொலை’ செய்வது இஸ்லாமிய மார்க்கத்துக்கு எதிரானது. எனவே மதசார்புள்ள கட்சிகளின் கூட்டணியான ‘முத்தா ஹிதா’ ‘மஜ்லிஸ்-இ அமால்’ இத்தகைய ‘மனிதவெடிகுண்டு’ களுக்கு ஏன் தடைவிதிக்கக் கூடாது? ‘என்று அப்போது அவர் கேள்வி எழுப்பினார். மதத்தின் பெயரால் பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் வன்முறைகளுக்கு மதச்சார்புக் கட்சிகள் மறைமுக ஆதரவு அளித்துவருவதாகவும் முஷாரப் குற்றம் சாட்டினார். அவர்மேலும் கூறியதாவது,

இந்தியாவுடன் நடைபெற்றுவரும் அமைதிப் பேச்சுவார்த்தையில் பாகிஸ்தான் முழுமனதுடன் ஈடுபட்டு வருகிறது. இந்தியத் தரப்பிலும் அதே அக்கறையுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறார்கள் மாறுபட்ட சூழ்நிலையில் நடைபெற்றுவரும் இந்தப் பேச்சுவார்த்தையில் காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப்பிரச்சினைகளுக்கும் சுமுக தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உள்ளது இவ்வாறு முஷாரப் கூறினார்.

# எதிரிகளை எப்படி வெல்வது தாய்வான் போர் ஒத்திகை

போர் ஏற்படும் போது எதிரிகளை எப்படி வெல்வது என்பது குறித்துத் தாய்வான் நேற்று முன் தினம் போர் ஒத்திகை நடத்தியுள்ளது. இந்த ஒத்திகைகளில் முப்படைகளினதும் ஒத்திகையும் நடந்துள்ளது.

தாய்வானின் முப்படைகளின் கூட்டு இராணுவப் பயிற்சி எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ஒத்திகையில் 16 எவ்ரக விமானங்கள் குண்டு வீசும் முறைகள் குறித்து பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளன உலங்கு வானூர்தியிலிருந்து ஏவுகணைகளை வீசுவது குறித்தும் பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.


இந்தப் பயிற்சிகள் யாவும் மலைப்பகுதிகளிலேயே நடந்துள்ளன..



ஈராக்கின் நஜாப் நகரில் மக்டடா அல்சாதரின் ஆதரவுப் போராளி ஒருவர் தாக்குதலுக்கான ஆயத்த நிலையில் காணப்படுகிறார்.

# ஈராக் உளவுத்துறை அதிகாரி தீவிரவாதிகளால் சிறைப்பிடிப்பு

ஈராக் உளவுத்துறை அதிகாரி ஒசாமா அப்துல் ஜப்பாரை ஈராக்கியக் தீவிரவாதிகள் பிணையாளியாகப் பிடித்துள்ளதாக அரேபியத் தொலைக்காட்சி அல்-ஜஸீரா தெரிவித்துள்ளது. புனித நகரான நஜாப் மீது அமெரிக்கப்படைகள் தாக்குதல் நடத்தியதற்குப் பதிலடியாக அவரைக் கைது செய்துள்ளதாகத் தீவிரவாதிகள் வெளியிட்ட வீடியோ ஒளிநாடாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உளவுத்துறை அதிகாரி ஜப்பாரின் அருகே முகமூடி அணிந்த தீவிரவாதிகள் இருவர் துப்பாக்கியுடன் நின்றிருக்கும் வீடியோவை அல்ஜஸீரா ஒளிபரப்பியது.



இஸ்ரேலின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களை விடுவிக்குமாறு கோரி காசா நகரில் பலஸ்தீன விடுதலை வீரர் யசீர் அரபாத்தின் படத்துடனும் கொடிகளுடனும் ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தீனர்கள்.

# அரேபியர்கள் அல்லாதவர்களை வெளியேற்ற சூடான் ஆதரவளிக்கவில்லை

## -அந்நாட்டு அரசதரப்பு

சூடானில் அரேபியர்கள் அல்லாதவர்களை விரட்டுவதற்கு “ஜங்ஜாமித்” என்ற இயக்கத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கவில்லையென்று சூடான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அகதிகள் தங்கியிருக்கும் முகாம் மீது இந்த இயக்கத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக சூடான் அரசாங்கம் டார்பரில் 20 ஆயிரம் பொலிஸ் படையினரை அனுப்பவுள்ளதாகக் கூறப்படும் அதேவேளை நைஜீரியா அவசியம் ஏற்படுமாயின் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் விதத்தில் 1500 துருப்புக்களை அனுப்புமென்று அந்நாட்டு சனாதிபதி அறிவித்துள்ளார். அத்துடன் சூடானில் உள்ள பாதுகாப்பு பஸ்து நிலைமை சீரடையாவிட்டால் வர்த்தகத் தடைகளைத் தாம் கொண்டு வருவதாக ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்துசபை சூடானில் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கென 2 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முற்பகுதியில் இருந்து டார்பரில் சுமார் 50 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்களென்று ஐக்கிய நாடுகள் மதிப்பீட்டில் தெரிவிக்கப்படுகின்றது.

# சதாம் உறவினர் இருவருக்கு சுவீடன் நாடு அடைக்கலம்

சதாமின் உறவினர்கள் இருவருக்கு சுவீடன் நாடு அடைக்கலம் அளித்துள்ளது. ஈராக்கில் அமெரிக்கப்படையெடுப்பின்போது தப்பிய அவர்கள் சுவீடன் நாட்டில் ஒரு நகரத்தில் பதுங்கியுள்ளனர். அவர்களுக்கு சுவீடன் நாடு அடைக்கலம் கொடுத்துள்ளது. என்று அந்த நாட்டு பத்திரிகை “எக்ஸ்பிரசன்” செய்தியாக வெளியிட்டுள்ளது. அவர்கள் இருவரும் ஈராக் இராணுவத்தில் ஜெனரல்களாக பதவி வகித்தவர்கள். இரண்டு மாதங்களுக்கு முன் திக்ரித் நகரில் இருந்து ஜோர்தானுக்கு தப்பிவந்தனர். சதாம் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்காக அவர்களை அமெரிக்கப்படைகள் ஈராக் முழுவதும் தேடி வந்தன. ஜோர்தானில் இருந்து அவர்கள் சுவீடன் சென்றனர். இச் செய்தியை வெளியிட்ட அந்தப் பத்திரிகை அவர்களது பெயர்களைத் தெரிவிக்கவில்லை. இதுபற்றி தங்களுக்குத் தெரியாது என்றும் அடைக்கலம் கோருபவர்களின் பெயர்களை மறைக்கமாட்டோம் என்றும் சுவீடன் குடியேற்ற அதிகாரிகள் கூறுகின்றனர்.



செப்டெம்பர் 11 தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் குழுவினர் அமெரிக்காவிற குள் சட்டவிரோதமாக வெளிநாட்டவர்கள் கள்ளப் பாதையூடாக வருவதாகக் குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் அரிசோனா எல்லையில் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ள அமெரிக்க எல்லைப் பாதுகாவலர்கள்.

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை.

**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்**
**(நீக்கோட்)**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 1846 – SRI(SF)

# கேள்வி அறிவித்தல் – 32

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் (நீக்கோட்)ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/NECORD/WS/03 | மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம் புனர்நிர்மாணம் | M4 நீர்வழங்கல் | 219,000/= |
| 02 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத்திட்டம் புனரமைப்பு - தொகுதி 6 | M7 நீர்ப்பாசனம் | 37,000/= |
| 03 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத்திட்டம் புனரமைப்பு - தொகுதி 7 | M7 நீர்ப்பாசனம் | 37,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) இருக்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ந் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து ஒத்த தன்மையான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்து திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதிப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சாரநிலைய வீதி,திருகோணமலையில பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434. தொலைநகரி 026-2227401 மின்னஞ்சல் necord@sltnet.lk).

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆவணி 19 இருந்து 2004 புரட்டாதி 3 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை; NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 புரட்டாதி 10 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 புரட்டாதி 3ந் திகதி 11.30க்கு NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

**திரு.த.லங்காநேசன்,**
**கேள்விச்சபை தலைவர்,**
**NECORD, 140, மின்சாரநிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-10079)

# சர்வதேச வளர்ச்சிப் போக்கிற்கமைவாக தேசியத்தலைவரின் திட்டமிடல்கள் அமைந்துள்ளன

## யாழ். மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**தமிழினத்தையும், தமிழ்த்தாயகப்பகுதிகளையும் சர்வதேச வளர்ச்சிப் போக்கிற்கு ஈடுகொடுக்கும் வளத்துடன் முன்னேற்றுவதற்கான சிறந்த திட்டமிடல்களுடனேயே தமிழீழ தேசியத் தலைவர் நகர்வுகளை மேற்கொண்டு வருகிறார். இவ்வாறு யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தெரிவித்தார்.**

கொரியாவில் நடைபெற்ற உலக மதங்களுக்கிடையிலான சமாதான தடகளவிளையாட்டு விழாவில் கலந்து பதக்கங்களை வென்ற யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே கலைவிழி இதனைத் தெரிவித்தார்.

போரினால், அரசியல்ரீதியாக வலுப்பெற்றுள்ள தமிழினம் சர்வதேசத்தின் சவால்களுக்கு ஈடு கொடுக்கும் விதமாக பிறதுறைகளிலும் தன்னை வலுப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இதனை உணர்ந்து எமது தேசியத் தலைவர் சர்வதேசத்தின் சவால்களுக்கெல்லாம் ஈடுகொடுக்ககூடிய பலமான இனமாக தமிழினத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி கல்வி, விளையாட்டு, சுகாதாரம், கலாசாரம், தொழில்நுட்பம் எனப் பல்வேறு பட்ட துறைகளையும் விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து சமநேரத்தில் வளர்த்தெடுத்து வருகிறார்.

எனவே தேசியத்தலைவர் அமைத்துத் தந்துள்ள வாய்ப்பினை நாம் சரிவரப்பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச சவால்களை சமாளிக்கும் வலுவான இனமாக மாறலாம் எனவும் கலைவிழி மேலும் தெரிவித்தார். (33)

## சிப்பாய் தற்கொலை

யாழப்பாணம் முகமாலையின் முன்னரங்கு காவல் மையத்தில் கடமையாற்றிய இராணுவ வீரர் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.(32)

## தென்மராட்சியில் மோட்டார் சைக்கிள் வழிப்பறித் திருடர்கள் நடமாட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் சமீப காலமாக மோட்டார் சைக்கிளில் சென்று சங்கிலிகளை அபகரித்தல், பெண்களிடம் சேட்டைகள் புரியும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது.

மட்டுவில், கல்வயல் மற்றும் சாவகச்சேரி நகரத்தை அண்டிய பகுதிகளிலும் இச்செயல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. தனியாகச் செல்லும் பெண்களிடமும் வீடுகளில் தனியாக இருக்கும் பெண்களிடமும் முகவரி விசாரிப்பது போல் அழைத்து பெண்களின் கழுத்தில் கிடக்கும் சங்கிலிகள் அறுக்கப்படுவதாக தெரியவருகிறது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் கல்வயல்ப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் ஒரு பெண்ணிடம் முகவரி விசா ரிப்பது போல் நடித்து தங்கச் சங்கிலி ஒன்றை அபகரித்து சென்றுள்ளனர். மற்றும் மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் செல்லும் பெண்களிடம் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் நபர்கள் கைகளைப் பிடித்து சேட்டை விடும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. (28)

## தொழிற்பயிற்சி பெற்றோருக்கு கடனுதவி வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் தொழிற்துறைப் பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக 2இலட்சம் ரூபா வரையான வங்கிக்கடன் சுயதொழில் வேலைவாய்ப்பு ஆரம்பிப்பதற்கு வழங்கப்படவுள்ளது. இதற்குரிய மாணவர்கள் 20 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெறும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர்கேட்டுள்ளார்.

## -உலக சமாதான மதங்களுக்கிடையிலான-

## சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் பதக்கம் பெற்ற வீரர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)




பயிற்றுவிப்பாளருடன் விளையாட்டு வீரர்கள்

கொரியாவில் நடைபெற்ற உலக சமாதான மதங்களுக்கிடையிலான சர்வதேச தடகள விளையாட்டு விழாவில் கலந்து பதக்கம் பெற்ற யாழ்மாவட்ட விளையாட்டு வீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

ரில்கோ கொலிடேஸ் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தின் ஆதரவில் யாழ் மாவட்ட மெய் வல்லுனர் சங்கம் ஏற்பாடு செய்த இந் நிகழ்வு யாழ்.மாவட்ட மெய் வல்லுனர் சங்கத் தலைவர் எஸ். மரியதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், ரில்கோ கொலிடேஸ் நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் திலகராஜ் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர், கலைவிழி, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த ஈஸ்வரன் முன்னைநாள் பிரபல்ய விளையாட்டு வீரர் கே.வாமதேவன், யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான்ராஜசிங்கம் ஆகியயோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி கொரியாவில் நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட ந.சிவகுமார் கமலமோகன், 110 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்தில் 2ஆம் இடம் பெற்று வெள்ளிப் பதக்க த்தைப் பெற்ற மரியநாயகம் சஞ்சீவ், 100 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்திலும், ,முப்பாய்ச்சலிலும் 5ஆம் இடம் பெற்ற செல்வராசா தயாழினியும் இவர்களுக்கு ஆசிரியராக செயற்பட்ட யாழ். பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி செல்வராசா இரமணனும் இந் நிகழ்வில் பரிசுகளும், சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பெருமளவான விளையாட்டு ஆர்வலர்களும், வர்த்தக வங்கி நிறுவனங்களின் முகாமையாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (செ)

## பொருளாதார மேம்பாட்டிற்கு கியூடெக் நிறுவனம் கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சில்லாலை கிராம மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்க கியூடெக் நிறுவனம் முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் மேற்படி கிராம மக்களின் சுய தொழில் முயற்சிக்கான கடனுதவிகளை இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் கடந்த கால போரால் பாதிக்கப்பட்ட மக்களது பொருளாதார அபிவிருத்தியை நோக்காக் கொண்டே இக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## -மீள இயங்க அனுமதிக்கப்பட்ட-

## பாடசாலை அபிவிருத்திப் பணிகள் படையினர் கெடுபிடியால் பின்னடைவு

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் மீள இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் படையினரின் கெடுபிடியால் தாமதங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இடம் பெற்றுவரும் கட்டட நிர்மாணப் பணிகளும், திருத்த வேலைகளுமே தொழிலாளர் பற்றாக் குறையால் தாமதமாகி வருகின்றது.

குடாநாட்டில் தற்போது நிலவி வரும் வேலைத் தொழிலாளர் பற்றாக் குறையினால் பரவலாகக் கட்டட நிர்மாணப் பணிகள் பெரும்பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

இந்நிலையில் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இடம்பெறும் கட்டட வேலைகளுக்கான தொழிலாளர்களை வேலைத் தலங்களிற்கு அனுமதிக்கப் படைத்தரப்புப் பின்னடிப்பதாகக் கட்டட ஒப்பந்தக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் புதிய தொழிலாளர்களை வேலைக்கென அழைத்துச் செல்லும் வேளையில் உரிய பெயர்களைச் சமர்ப்பித்து முன் அனுமதி பெற்றிருக்கவில்லையென காரணங்காட்டி தாமதிக்கப்படுவதாகவும் சிலவேளைகளில் திருப்பி அனுப்பப்படுவதாகவும் ஒப்பந்தக்காரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் குறித்த ஒப்பந்தக் காலப்பகுதியினுள் வேலைகளை முடிவுறுத்த முடியாதநிலை தோன்றியிருப்பதாக அவர்கள் வடகிழக்கு மாகாண சபையின்கல்வி அமைச்சின்பாடசாலைகள் வேலைப்பணிப்பாளர் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். (27)

## சிற்றூர்தி சேவை

(தென்மராட்சி)

பயணிகள் நன்மை கருதி பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி, கொடிகாமம் வழி இலக்கம் 759 பாதையூடாக புதிதாக ஐந்து சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்த நேரக்கணிப்பாளர் கைலைநாதன் நீண்டகாலமாக இப்பாதையூடாகப் பயணிக்கும் மக்களும் மற்றும் முகமாலை ஊடாக வெளியிடங்களுக்குப் பயணிக்கும் மக்களும் இனிமேல் சிரமமின்றி சென்றுவர முடியும் என்றும் நெருக்கடி இல்லாத இலகு பயணத்தை மேற்கொள்வதற்காகவே பயணிகள் நன்மைகருதி ஐந்து சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்டுள்ளன என அவர் தெரிவித்தார்(28)

## புங்குடுதீவுப் பிரதேசத்தில் எழுச்சிப் பேரவை சங்கமம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுப் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. புங்குடுதீவு மாரியம்மன் ஆலய மண்டபத்திலே புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் எஸ்.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பருதி ஏற்றி வைத்தார். ஆசியுரையினை புங்குடுதீவுப் பிரதேச இந்துமதக்குருக்கள் வழங்கினார். வரவேற்புரையினை தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாக உறுப்பினர் திருமதி.புஸ்பலதா நிகழ்த்தினார். விளக்கவுரையினை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறிஸ் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கருத்துரையினை புங்குடுதீவு மடத்துவெளி வித்தியாலய அதிபர் இ.இராசதுரை வழங்கினார்.

தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக்கிளைகளின் முன் மொழிவுகள் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து நன்றியுரையுடன் சங்கம நிகழ்வு நிறைவு பெற்றது.

## ஆங்கில தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் , 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் 24ஆம் திகதி யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும் 25 வரையிலான தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் பங்கு கொள்ளவுள்ள இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை யாழ்.வலயக் கல்வி பணிமன்ன மேற்கொண்டுள்ளது. (33)

# சமாதானம் கரைந்து போகமுன் ...


போர் நிறுத்தவுடன்பாடு என்பது சமாதான உடன்பாடு என்று கூறமுடியாது சிறிலங்காவின் போர் நிறுத்த உடன்படிக்கை மூலம் யுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பது மட்டுமே ஆயினும் இப்போது இந்தக் கட்டுப்பாடு தளர்வுறும் நிலை ஆரம்பித்துள்ளது. சமாதானம் என்பது தானாக ஏற்படாது அதற்காக கடுமையாகப் பாடுபட வேண்டும்.

“ சிறிலங்காவில் சமாதானப் பேச்சுக்கள் இப்போதைக்கு ஆரம்பிக்காது இருதரப்பினரதும் புரிந்துணர்வு குறைந்து செல்கின்றது. இப்போது நடைபெறும் செயல்களும் சமாதானத்தை ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலையை தோற்றுவிக்காமல் உள்ளன” என்பது நோர்வேயின் கருத்து இதனை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மறுத்து அப்படி ஒன்றும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அவர் இன்னும் எதிர்க்கட்சிப் பேச்சாளராகவே காணப்படுகிறார். காரணம் ஐ.ம.சு.முன்னணி எதிர்க்கட்சியாக இருந்த வேளையிலும் இவர் ஜே.வி.பி யினருடன் சேர்ந்து நோர்வேயின் தலையீட்டை அன்று கண்டித்தார். நோர்வே உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக கூறி நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்.

சமாதான நடவடிக்கைகள் சிலவேளை வரவேற்கப்படாத ஒன்றாக அரசியல் வாதிகளுக்கு அமையலாம்- ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் சென்ற சமாதான நடவடிக்கைகளை தென்பகுதி மக்கள் பெரிதும் வரவேற்கவில்லை. அது போல் யுத்த நிறுத்த உடன்படிக்கையும் சிலருக்கு கசப்பாகவே இருந்தது. விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கமும் அவ்வாறானதாக சிலருக்கு தெரிந்தது. அதுமட்டுமன்றி மூன்றாம் தரப்பாக நோர்வே அரசு மத்தியஸ்தராக பணியாற்றியமையும் வெறுப்புக்குள்ளாகியது. எனவே இவ்விடத்தில் ஏதோ ஒரு தவறு நடந்திருக்க வேண்டும். அவ்வாறு நோர்வே அரசு மீது இப்போதைய அரசுக்கு வெறுப்புத் தோன்றினால் அவர்களின் மத்தியஸ்தத்தை நிராகரிக்க வேண்டும்.

கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சியின் போது சந்திரிகாவின் கட்சி நோர்வே குழுவினருக்கு எதிராகவே ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டது. அக்கட்சி ஒருதடவை இந்தியாவின் மத்தியஸ்தத்தைக் கோரியது. இன்னொருதடவை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து புலிகளை யுத்தத்தின் மூலம் அடக்க வேண்டும் எனக் கூறியது.

இப்போது ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அரசு தனது ஆட்சிப் பலத்தை (பெரும்பான்மையை) நிரூபிக்க தொண்டமானிடமும்



ஹெல உறுமயவிடமும் மண்டியிடுகிறது. ஆனால் ஹெல உறுமய இடைக்கால நிர்வாக சபையை எதிர்க்கிறது தொண்டமானின் கட்சி வரவேற்கிறது. இந்தக் குழப்ப நிலையைக் கண்டு விடுதலைப்புலிகள் நகைக்கின்றனர். அத்துடன் ஸ்திரமற்ற சிங்கள அரசு இனப்பிரச்சினை தொடர்பாக இடைக்கால சபையை எவ்வாறு வழங்கப் போகிறது என்றும் சிந்திக்கின்றனர் காரணம் இப்போதைய சிறிலங்கா அரசின் நிலைப்பாடு அதனை உறுதிப்படுத்துவது போல தெரிவதால் ஆகும்.

எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக என்ன நிகழும் என்பதை உணர்த்துவதுடன் இவை அனைத்தையும் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் சும்மா பார்த்திருக்க மாட்டார்கள் எனப் புலிகளின் உத்தியோக பூர்வ ஏடு தெரிவித்துள்ளது. அத்துடன் தென்னிலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக மீண்டும் ஒரு யுத்தத்தை திணிக்க முயல்வதாகவும் தற்போதைய அரசு சமாதானம் பற்றி சிந்திக்காமல் தென்னிலங்கை அரசியல் பற்றியே சிந்திப்பதாகவும் மேற்படி ஏடு தெரிவிக்கின்றது.

போகப்போக சமாதான முனைப்புகள் மழுங்கடிக்கப்பட்டுப் போவதாகவும் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் தோன்றுமா எனவும், மக்கள் உணரக்கூடும். எனினும் நோர்வே அரசும் யுத்த விற்பன்னர்களும் மீண்டும் பெரியதொரு யுத்தம் ஏற்படும் சாத்தியம் கிடையாது என்று தெரிவித்துள்ளனர்.

அன்று ரணில்விக்கிரமசிங்க யுத்தநிறுத்தத்தை அமுல் நடத்தவும், சமாதானத்தை ஏற்படுத்தவும் இரண்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினார். ஒன்று நோர்வேயின் மத்தியஸ்தம், அடுத்தது ஏ-9 பாதை திறத்தல் இதன் மூலம் அவர் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு சமிக்ஞை காட்டினார்.

இன்று சந்திரிகா அரசு இந்தியா மத்தியஸ்தம் வழங்குவதையே அதிகமாக விரும்புகிறது. இந்தியா வேறுவகையில் விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் பிறப்பிக்கலாம் என்று சந்திரிகா கருதுவாராயினும் முழுத்தமிழ் நாடும் விடுதலைப்புலிகள் பக்கம் இருப்பதை அவர் மறந்துவிட்டார்.

சிறிலங்கா இனப்பிரச்சினைக்கு பெடரல் அமைப்பு முறையைக்கொண்டு வருவது இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கின்றது என்ற போதும் ஜே.வி.பி.அதனை எதிர்க்கும் நிலையே காணப்படுகின்றது. ஆகவே இந் நிலையில் இந்தியாவின் மத்தியஸ்தம் கேள்விக்குறியே.

கடந்த நாட்களில் சிறிலங்காவின் முக்கிய அரசியல் வாதியான தயான் ஜயதிலக்க என்பவரும் தனது அரசியல் கட்டுரைகளில் பெடரல் முறையோடு தென்பகுதி மக்கள் ஒத்துப்போகவேண்டும் என்றே குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஒஸ்லோ உடன்பாட்டைப் பின்பற்றுவது நல்லது என்றும் தெரிவித்துள்ளார். இதற்கு ஒத்துப்போகாத எந்த அரசும் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக சந்திரிகா குழுவினர் நடத்திய போராட்டத்தில் சுகம்கண்டோரை இப்போது போரில் ஈடுபடுவதற்கான நிலைக்கு கூட்டணி அரசு இட்டுச்செல்ல வேண்டும். இல்லையேல் அக்கூட்டணிக்குள் முக்கிய பங்காளியான ஜே.வி.பி.யின் தலைமையிலான தேசாபிமானிகளும் தற்போது கூட்டணியின் உறுதியை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளவர்களுமானவர்கள் மேலும் அதனைச் சிதறடித்துவிடுவர்.

சமாதான நடவடிக்கைகள் காலதாமதம் ஏற்படுவதன் பின்னணியில் அரசு அதற்கான மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இடம் இருக்கிறது. அதுவிடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்படும் மாற்று இயக்கத்தினரைப் பயன்படுத்தி சிறுயுத்தத்தைக் கிளப்பிவிடுதலாகும்.

எது எவ்வாறேனும் தற்போதைய அரசு ஏதோஒரு முடிவுக்கு வந்தாக வேண்டிய கட்டாய நிலையில் இருப்பது தெளிவாகின்றது. காரணம் அது சமாதானமோ, யுத்தமோ ஏதோஒன்றை உடனடியாகச் செய்யாமல் காலம் தாழ்த்துமானால் தென்பகுதி செல்வாக்கு வீழ்ச்சி கண்டுவிடும்.

சுனந்த தேசப்பிரிய
(லங்காதீப)
மொழியாக்கம்-வடிவேல்

ஆயினும் யுத்தம் என்ற நிலை உண்மைத் தன்மை பெறுவதும், பேச்சுவார்த்தை மேசையில் இருபாலாரும் நம்பிக்கை இழக்கும் போதே இருபிரிவினரும் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இழக்கும் பட்சத்திலேயே இவ்வாறானதொரு நிலையேற்படும்.

இன்று அமெரிக்காவும் இருபகுதியினரையும் உடனடியாகப் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு கேட்டுள்ளது. ஆயினும் சந்திரிகா அரசு விரும்பியோ விரும்பாமலோ யுத்தம் என்ற நிலைக்கே தள்ளப்படுகிறது.

# சனாதிபதிக்கு அவதூறு விளைவிக்கும் கருத்துக்களை மகேஸ்வரன் வெளியிடுகிறார்

-அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன் சனாதிபதிக்கு அவதூறை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், சிறுபான்மையினத்தவர் என்ற அடிப்படையை வைத்துக் கொண்டு ரி.மகேஸ்வரன் இவ்வாறான அவதூறான கருத்துக்களை சனாதிபதி தொடர்பில் வெளியிட்டு வருவதாகத் தெரிவித்தார். அதே போல பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் சனாதிபதிக்கு அவதூறை ஏற்படுத்தும் கருத்துக்களைத் தெரிவித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரி.மகேஸ்வரன் தொடுத்த வாய்மூல கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்க தமக்கு 2 மாதகால அவகாசம் வேண்டும் எனத் தெரிவித்த பின்னரே அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

அதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.எம் காதர் நேற்று முன்தினம் சிறை அதிகாரிகள் சகிதம் பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அவரை எதிர்கட்சியினர் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர். (32)

# பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு அடுத்தமாதம் 2ஆம் திகதி வழங்கப்படும்

-அரசாங்கம் அறிவிப்பு

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன. .இதன்கீழ் 17 ஆயிரத்து 23 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் முதல் அனுப்பப்படுகின்றன. அதேநேரம் எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் தொழில்வாய்ப்பை பெறும் ஏனைய 41 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. நியமனம் .பெறும் பட்டதாரிகளுக்கு

மாதத்துக்கு 6 ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்பட்டு தகவல், கணினி மற்றும் முகாமைத்துவம் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் கட்டமைப்பை மாற்ற ஆலோசனை

(கொழும்பு)

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை வினாத்தாளின் கட்டமைப்பை மாற்றம் செய்வதற்காக கல்வி அமைச்சினால் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாளின் கட்டமைப்பை இலகுவாக்குவதன் மூலம் மாணவரின் சுமையைக் குறைக்கும் முகமாகவே இக்குழு கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளதாக மேல் முறையீட்டு ஆணையாளர் எ.எம்.ஆர்.பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார். தற்போது காணப்படும் உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் சரியான பகுதிகளுக்கு புள்ளி இடுதல், கட்டமைப்பு மற்றும் கட்டுரை என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இக் கட்டமைப்புக்கள் மாற்றம் செய்யப்படுவதுடன் இவற்றுக்கான மாதிரி வினாத்தாள் முன் கூட்டியே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் புகையிரதத் திணைக்களத்தை உருவாக்காமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

-புகையிரதத் தொழிலாளர் ஏற்பாடு

(கொழும்பு)

புகையிரத அதிகாரசபையை ரத்துச்செய்து மீளவும் புகையிரதத் திணைக்களமாக அமைப்பதில் அரசாங்கம் காட்டிவரும் தாமதத்தை எதிர்த்து புகையிரத தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

“140 வருடங்கள் பழமை வாய்ந்த புகையிரத திணைக்களத்தை புகையிரத அதிகாரசபையாக மாற்றுவதற்கு முயற்சித்ததாலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை நாங்கள் தோற்கடித்தோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தபின் அதிகாரசபை மாற்றத்திற்கான வேலைகளை நிறுத்தி வைப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தை எடுத்துள்ளபோதும் திணைக்களம் இதுவரை அமைக்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடாத்தவுள்ளோம்.” என்று புகையிரத ஊழியர்களின் சொத்துக்களையும்,உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை போக்குவரத்து அமைச்சின் முன்னால் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளது

# கிளி.மாவட்ட முன்பள்ளிகளின் ஆக்கப் பொருட் கண்காட்சி


## பிரதேச ரீதியாக நடாத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும்அனைத்து முன்பள்ளிகளினதும் ஆக்கப் பொருட் கண்காட்சி பிரதேச ரீதியாக நடைபெறவுள்ளது.**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய ஒழுங்கமைப்பில் சிறுவர் சார்ந்த முன்பள்ளிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து ஆக்கப் பொருட்கண்காட்சி ஒன்றை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பளை கோட்ட முன்பள்ளிகளின் கண்காட்சிகள் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக வளாகத்தில் இன்று காலை 9.00 மணிக்கும், பூநகரி பிரதேசத்தில் பூநகரி அபிவிருத்தி நிறுவன வளாகத்தில் 21 ஆம் திகதி காலை 9.00மணிக்கும், கண்டாவளை பிரதேசத்தில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன வளாகத்தில் காலை 9.00 மணிக்கும், வட்டக்கச்சியில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் 24 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும், அக்கராயனில் ஸ்கந்தபுரம் இலக்கம் 01 பாடசாலையில் 26 ஆம் திகதி காலை9.00 மணிக்கும், முழங்காவில் ஜெயபுரம் வலயச் செயலகத்தில் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும், கிளிநொச்சியில் கிளிநொச்சி அகதிகள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

எனவே இக் கண்காட்சி நிகழ்வுகளை அனைத்து பொது மக்களையும் பார்வையிட்டு பயன் பெறுமாறு கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் நிலா கேட்டுள்ளார். (ச)



புதுக்குடியிருப்பு நகரை அபிவிருத்தி செய்யும் முகமாக புதுக்குடியிருப்பு வணிக நிலையங்கள் பின்நோக்கி நகர்த்தப்பட்டுவரும் இவ்வேளை புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் வீதியின் அருகாகவிருந்த, புதுக்குடி யிருப்பு பிரதேச சபைக் கட்டடம் அகற்றப்பட்டு வருவதையே படத்தில் காண்கிறீர்கள். படப்பிடிப்பு. தவரட்ணம்

# தாய் மடியின் தாலாட்டு ஒலிப்பேழை அறிமுகவிழா

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ விடியல் இசைக்குழுவின் தாய் மடியின் தாலாட்டு இசைத்தட்டு ஒலிப்பேழை அறிமுகவிழாவும் இசைநிகழ்வும் எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் சிறப்பான முறையில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. (08)

# தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்விற்கு ஏற்பாடு

(முள்ளியவளை)

முள்ளியவளை கோட்ட தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி நிகழ்வானது எதிர்வரும் 21 ஆம் திகதி அன்று தண்ணீரூற்று இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கி.தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் ஊரகதேசிய எழுச்சிப்பேரவையினரின் செயற்பாட்டறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் ஊரகங்களிலுள்ள நிலவரங்களை அறிந்து கொண்டு தீர்வு காணப்படல் எனப்பல அம்சங்களுடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுமுள்ளனர். மேற்படி நிகழ்வில் கோட்டத்திற்கு ட்பட்ட சகல ஊரகதேசிய எழுச்சிப் பேரவையினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கி.தியாகராசா கேட்டுள்ளார். (ஆ)

# யுனிசெப் மீளாய்வுக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்

(அலுவலகசெய்தியாளர்)

யுனிசெப் மீளாய்வுக் கூட்டம் ஏற்கனவே தீர்மானித்தபடி முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுனிசெப் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் இரண்டரை வருட மீளாய்வு ஏற்கனவே தீர்மானித்தபடி 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றவர்கள் தவறாமல் இம்மீளாய்வுக் கூட்டத்திற்கு சமுகமளித்து ஆலோசனைகளை வழங்கும் வண்ணம் யுனிசெப் கிளிநொச்சி வலய; அலுவலகம் கேட்டுக்கொள்கின்றது. (தீ)

# புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர் மரணம்

## அடையாளம் காண உதவுக

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் காலை 8.40. மணிக்கு அனுமதிக்கப்பட் சுமார் 70வயது மதிக்கத்தக்க வயோதிபர் மரணமடைந்துள்ளார்.

கறுப்பு நிறமுடைய இவர் 4 அடி 5அங்குலம் உயரமுடையவர் இவரின் தலை நரைத்துள்ளது. மேலும் பச்சைநிற சேட்டும் செக் சாரமும் அணிந்துள்ளார். இவர் வைத்தியசாலைக்கு உடையார் கட்டிலிருந்து பஸ்மூலம் வந்துள்ளார் என்பது இவரது பஸ்பயணச்சீட்டு மூலம் அறிய முடிகின்றது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் புதுக்குடியிருப்பு காவல் துறையினருடன் தொடர்பு கொள்ளவும். (08)

# உறுதிப்படுத்தவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் கணினி கற்கை நெறி ஒன்று வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எனவே அண்மையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்டு அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெற்ற கற்கையாளர்கள் அனைவரையும் எதிர்வரும் 22.08.2004.இற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன கருமபீடத்தில் பதிவினை மேற்கொண்டு தமது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கல்வி நிறுவன முதல்வர் தி.பிரபாகரன் கேட்டுக்கொள்கின்றார். (15)

# நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டாலே பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரும்

### –செட்டிகுளம் பிரதேச செயலர் கருத்து

(வவுனியா)

வவுனியாவில் உள்ள அனைத்து நலன்புரி நிலையங்களும் மூடப்படவேண்டும். அப்போதுதான் இடம்பெயர்ந்து அங்கு வாழ்ந்துவரும் மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்திக்கொள்ள முடியும் என்று செட்டிகுளம் பிரதேச செயலாளர் செல்வி துரைசாமி தெரிவித்துள்ளார்.

நலன்புரி நிலையங்களில் சமுதாய சீர்கேடுகள் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது உண்மையா என்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தற்போது நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் பெண்கள் வருமானம் இல்லாததன் காரணமாக வெளியிடங்களுக்குப் பணிக்காகப் போகின்றனர்.

இந்தப் பெண்களை சில நபர்கள் திட்டமிட்டு இம்சைக்குள்ளாக்குகின்றனர். இவற்றினைத் தடுப்பதென்றால் அந்த மக்கள் தங்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படுவது மிகவும் முக்கியமானது. அப்போதுதான் இவற்றைத் தடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஒன்று கூடல்

(புதுக்குடியிருப்பு)

மல்லாவி கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தேசியஎழுச்சிப் பேரவைக்குமான ஒன்று கூடல் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இவ் ஒன்று கூடல் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் சிறப்புரையினை முல்லைமாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் மல்லாவிக் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தேசியஎழுச்சிப் பேரவையினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (8)

# 20அடி ஆழமான பள்ளத்தால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

உதயநகர் - பாரதிபுரம் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியில் உள்ள 20 அடி ஆழமான பாரியபள்ளப் பகுதி பலவருட காலமாக புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக இவ் வீதியால் பயணத்தினை மேற்கொள்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் மாரி காலங்களில் பல கிலோமீற்றர்கள் சுற்றியே கிளிநொச்சி நகரப் பகுதியினை சென்றடைய வேண்டிய நிலைக்கு ஆளாகி வருகின்றனர்.

மேற்படி பள்ளத்திற்கு பாலமிட்டு மக்கள் போக்குவரத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள மாட்டார்களா வெனமக்கள் ஆதங்கத்தினை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)



உதயநகர் பாரதிபுரம் வீதியில் உள்ள பள்ளத் தினை கிளி.அரச அதிபர் கரைச்சிப் பிரதேசசெயலர் உதயநகர் கிராம சேவை அலுவலர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர் நேரில் பார்வையிடுவதனை படத்தில் காணலாம். (படம் -சோதி,வரன்)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு தனியான சேவை உருவாக்கம்!

(திருமலை)

ஆசிரிய ஆலோசகர்களுக்கான தனியான சேவையொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக அகில இலங்கை ஆசிரியர் ஆலோசகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை கடந்த 9ஆம் திகதி கல்விமற்றும் உயர்கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அப்பேச்சுவார்த்தையின் போது ஆசிரிய ஆலோசகர்களுக்கு தனியான சேவையொன்றை உருவாக்குவது அவசியம் என்று எக்கநாயக்க ஆணைக்குழு செய்த சிபார்சை ஏற்றுக்கொள்வதென முடிவாகியது. இதுதொடர்பான அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை நாளை 20ஆம் திகதி சங்க நிர்வாகிகளுக்கும் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளுக்கும் இடையில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக சங்கச் செயலாளர்களில் ஒருவரான எஸ். மோகனசுந்தரம் தெரிவித்தார். (25)

கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம்

# நிறைவேற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மை மற்றும் சர்வசன வாக்கெடுப்புத்தேவை

கட்டாயமாக மதமாற்றம் தொடர்பான பிரேரணையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகள் அரசியலமைப்பின் 10ஆவது பந்திக்கு முரண்பாடாக அமைந்துள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.இந்தத்தீர்ப்பைநேற்றுமுன்தினம பாராளுமன்றம் கூடியவேளையில் சபாநாயகர் வி.ஜே.மு லொக்கு பண்டார வெளியிட்டார் குறிப்பிட்டபிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமானால் அது மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனும் சர்வசன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.இதேவேளை குறிப்பிட்ட பிரே ரணையில் மேலும் சில பந்திகள் திருத்தங்களுக்கு உட்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதாகவும், சபாநாயகர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட 3 ஆம் பந்தியில் மத மாற்றம் செய்யப்படும் போது அதுதொடர்பில்பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது அதேபோல 4 ஆம் பந்தியில் மத மாற்றம் தொடர்பில் குற்றம் சுமத்தப்படும் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய தண்டனைகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சனாதிபதியினால் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி சீர்திருத்த பிரேரணை மற்றும் தேர்தலில் அடையாளத்தை நிரூபிக்கும் திருத்த பிரேரணை என்பன அரசியல் அமைப்பிற்கு உட்பட்டவை என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையும் நேற்று முன்தினம் சபாநாயகர் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

## பதவி ஏற்பார்

(செட்டிகுளம்)

வன்னிக்கான புதிய சிறிலங்கா இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் பராமி குலத்துங்க எதிர்வரும் முதலாம்திகதி பதவி ஏற்பாரென்று தெரிவிக்கப்படுகிறது தற்போது பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சிசிர விஜய சூரிய இராணுவ தலைமையகத்திற்கு மாற்றப்படுவதை அடுத்தே இவர் பதவிஏற்க இருக்கிறார்.

(21)


உ

அருள்மிகு கிளி/ கந்தசுவாமி கோவிலின் மகோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்படும்



## சைவநெறி திறனாய்வுப் போட்டி - 2004

சகலரும் பங்கு பெறக்கூடிய இப்போட்டியில் சிறப்புப் புள்ளி பெறும் 30 போட்டியாளருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

*வினாக்கொத்து ஒன்று உருபா 10/=*

*முடிவுத்திகதி 26.08.2004*

*தேர்திருவிழாவில் பரிசளிக்கப்படும்.*

*வினாக்கொத்து பெறும் முகவரி:-*

1-கிளி/கந்தசுவாமி கோவில்,
2-பிள்ளையார் பொத்தகசாலையாழ்.சாலை
3-இலக்கியா புடைவையகம் வட்டக்கச்சி

நிர்வாகக் குழு,
திருநெறிக்கழகம்.

(4973)



SRI LANKA RED CROSS SOCIETY

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி மாவட்டக் கிளை.

## வருடாந்த பொதுக்கூட்டமும், ஆளுநர் சபைத் தெரிவும்.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 03.10.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நிறுவனத் தலைவர் திரு. கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆளுநர் சபைக்கான தலைவர், உப.தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் 6 நிர்வாக உறுப்பினர்களுக்கான வேட்புமனுக்கள் மாவட்டப் பொதுச் சபைப் பிரதி நிதிகளிடமிருந்து கோரப்படுகின்றன. வேட்புமனுக்களை மாவட்டக்கிளையில் பெற்றுப் பூர்த்தி செய்து 06.09.2004 திங்கட்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கும1 2 கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேர்தல்– 2004" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை கிளைச் செயலாளரிடம் அல்லது கிளை நிறைவேற்று அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

க.கணேஸ்,
கௌரவசெயலாளர்,

(சி.9791)



## புதுமனை புகுவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் சுபமங்களகரமான நிகழும் தாரண வருடம், ஆவணி மாதம், 4ஆம் நாள் (20.08.2004)வெள்ளிக் கிழமை மாலை 2.15 தொடக்கம் 4–08 மணி வரைவரும் சுப வேளையில்

*எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற*

### வசந்தி இல்லம்

புதுமனை புகுவிழா நடாத்த (நாம்)நிச்சயித்திருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரவன் பல்பொருள்வாணிபம்
வாடியடி – பூநகரி
(10068)

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

செ.உ.தயகுமார்(குமார்)
குடும்பத்தினர்

வரவேற்பாளர்கள் ஆனந்தன் குடும்பத்தினர்.



# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால்கீழ்க் காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01-பணிநிலை** **உத்தியோக உதவியாளர் தரம் - 03**

**தகைமைகள்** :-
i. க.பொ.த (சாதாரணதர) தேர்வில் கணிதம் 42/கணிதம்II, தமிழ் உட்பட 05 திறமைச்சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த (உயர்தர) தேர்வில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
ii. ஆண்,பெண் இருபாலாரும்.

**மாதாந்த ஊதியம்** :- $\frac{3,670 - 5,070}{70 \times 20} + 6,000$

**அகவை எல்லை** :- 19 - 25 வருடங்கள்

**02-பணிநிலை** :- **பாதுகாப்பு உதவியாளர் தரம் - 03**

**தகைமைகள்** :-
i. 10ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ii. நல்லஉடல் வலுவும்,தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. உயரம் 5'5" இற்குக் குறையாமலும், நெஞ்சுச்சுற்று 32" இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
iv. ஆண் பாலார் மட்டும்.
v. கராத்தே போன்ற தற்காப்புக்கலைகளிற்கான சான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் என்பவற்றைக் கொண்டுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மாதாந்த ஊதியம்** :- $\frac{2,780 - 3,780}{50 \times 20} + 6,000$

**அகவை எல்லை** :- 28 - 35 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **'ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை, உத்தியோக உதவியாளர்'** அல்லது **'ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை, பாதுகாப்பு உதவியாளர்'** எனக் குறிப்பிடப்பட்டு **2004.09.15** ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழவைப்பகத்தின் எல்லாக்கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

**மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு :-
01. முழுமையாக நிறைவு செய்யப்படாத சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் **(மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ் சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு)** நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளையினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி.9786)

மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாண சபை.

**போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காாப்)**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

“ஆஅவ” கடன் இல. 2043 – SRI(SF)

# கேள்வி கோரல் - 02

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (“ADB”) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் CAARP, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்த காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/CAARP/ED/01 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் 80’x30’ மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தினை நிர்மாணித்தல். | M6 (கட்டடம்) | 80,000.00 |
| 02 | VA/CAARP/ED/02 | வ/புளியங்குளம் இந்துக் கல்லூரியில் 110’x25’ இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், 40’x20’ விஞ்ஞான ஆய்வுகூடமும் மீள் நிர்மாணித்தல். | M6 (கட்டடம்) | 60,000.00 |
| 03 | VA/CAARP/ED/03 | வ/பழையவாடி அ.த.க.பாடசாலையில் 70’x25’ வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M8 (கட்டடம்) | 15,000.00 |
| 04 | VA/CAARP/ED/07 | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலையில் 110’x25’ வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7(கட்டடம்) | 22,000.00 |
| 05 | VA/CAARP/ED/08 | வ/சேமமடு சண்முகானந்தா, மகா வித்தியாலயத்தில் 110’x25’ இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், 40’x20’ விஞ்ஞான ஆய்வுகூடமும் மீள் நிர்மாணித்தல். | M6(கட்டடம்) | 60,000.00 |
| 06 | VA/CAARP/ED/10 | வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 110’x25’ இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல். | M7(கட்டடம்) | 49,000.00 |
| 07 | VA/CAARP/ED/13 | வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையில் 110’x25’ வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7(கட்டடம்) | 20,000.00 |
| 08 | VA/CAARP/ED/14 | வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்தில் 110’x25’ இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7(கட்டடம்) | 47,000.00 |
| 09 | VA/CAARP/ED/15 | வ/தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயத்தில் 110’x25’ இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7(கட்டடம்) | 44,000.00 |
| 10 | VA/CAARP/HS/02 | புளியங்குளத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிர்மாணித்தல். | M6(கட்டடம்) | 60,000.00 |
| 11 | VA/CAARP/HS/04 | மாமடுவில் வைத்திய அதிகாரி அரச குடிமனை, திறந்த கிணறு, தண்ணீர்த் தாங்கி, சுற்றுவட்ட வேலி நிர்மாணம். | M7(கட்டடம்) | 42,000.00 |
| 12 | VA/CAARP/IR/01 | கனகராயன்குளத்தில் நீர்ப்பாசனத் திட்டம் புனரமைத்து 314 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதியளித்தல். | M6(நீர்ப்பாசனம்) | 79,000.00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (‘இக்ராட்’ உடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV. ‘இக்ராட்‘ வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

(10ஆம் பக்கத்தொடர்ச்சி)

(09ஆம் பக்கத்தொடர்ச்சி)

4. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARPவேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 024-2222589, பக்ஸ்: 024-2222589, ஈமெயில்: necordva@sltnet.lk.
6. ஒப்பந்த ஆவணங்களை ஓகஸ்ட் 18, 2004 இலிருந்து செப்ரெம்பர் 03, 2004 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூபா ஆயிரம் (1,000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.
7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் NECORD அலுவலகத்தில் ஓகஸ்ட் 27, முற்பகல் 10.00 இற்கு நடைபெறும்.
8. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.
9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு செப்ரெம்பர் 09, 2004 பிற்பகல் 3.00இற்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஷ், தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

(சி-10078)

# தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்

## கிளிநொச்சி

### கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், வன்னி மாணவர்களின் நன்மை கருதி பின்வரும் கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### கற்கை நெறிகள்

01. மரவேலை தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி.
02. கட்டுமான தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி
03. மின்னொட்டு தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறி
04. அலுமினியம் பொருத்துதல் பயிற்சி நெறி.
05. முச்சக்கர வண்டி (ஆட்டோ) திருத்துதல் பயிற்சி நெறி.
06. தொலைக்காட்சி, வானொலி திருத்துதல் பயிற்சி நெறி.
07. வீட்டு மின் இணைப்பு திருத்துதல் பயிற்சி நெறி.
08. உழவு இயந்திரம் திருத்துதல் பயிற்சி நெறி.

**கல்வித்தகைமை**

6ஆம் வகுப்பிற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**ஊக்குவிப்பு** இல. 1,2,3,4, ஆகிய பயிற்சி நெறிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை, பிரயாண ஒழுங்கு என்பன செய்து கொடுக்கப்படும்.

மேற்படி பயிற்சிநெறிகளை கற்க ஆர்வமுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை எதிர் வரும் 30.08.2004 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்

அதிபர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்
கிளிநொச்சி.

(சி.10076)


## உழைக்கும் கரங்களுக்கு உரம் சேர்க்கவும்,
## உழைப்பாளர்களுக்கு நிதிவசதியளிக்கவும்,
# கிளிநொச்சிப் பிரதேசத்தில்

## 19 ஆகஸ்ட் 2004 முதல்

பல தொகைகளில் சீட்டுக்கள்
100% உத்தரவாதம்
இலகு நடைமுறைகள்
இரகசியத்தன்மை

# சீர்க்கோ சீட்டு நிறுவனம்
யாழ்சாலை
கிளிநொச்சி
பதிவு எண்:- வ/15912201

குறுகிய காலத்திட்டங்கள்
பதிவு செய்யப்பட்ட நிறுவனம்
நாளாந்தம் செலுத்தும் வசதி
போனஸ் கொடுப்பனவுகள்

உங்கள் வெற்றிக்கு எம்முடன் இணைந்திடுங்கள்

(சி-10080)

# திபெத்தில் உருவானகுளம் உடையும் அபாயம் 350 இந்தியக் கிராமங்கள் அழியும் ஆபத்து

நிலச்சரிவுக்குப் பிறகு திபெத்தில் திடீரென ஏற்பட்ட குளம் எந்த நிமிடமும் உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் 350 இந்திய கிராமங்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.ஆற்றைத் தடுப்பதால் இமயமலைப் பகுதியில் திபெத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவு, சட்லஜ் நதியின் கிளை ஆறான பரீச்சுவின் ஓட்டத்தைத் தடுத்தது. இதனால் பரீச்சு நதியில் கடந்த மாதம் "திடீர்"எனகுளம்ஏற்பட்டது.

நதியிலிருந்து புறப்பட்டு வரும் புதுப்புனல் நீர் இந்தக் குளத்தில் விழுகிறது. நாளுக்கு நாள் குளத்தில் நீர் பெருகி வருகிறது.

நீர்வரத்து அதிகமானால் குளத்தின் கரைகள் உடைந்து தண்ணீர் இந்தியாவிற்குள் புகுந்து விடும். இதனால் இமாச்சலப் பிரதேசத்தில் 350 கிராமங்கள் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. சட்லஜ் நதியின் கரையிலுள்ள 8கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேரை இமாச்சலப் பிரதேசஅரசுஅப்புறப்படுத்தியுள்ளது.

குளத்தின் கரையருகே உள்ள 210 விவசாயிகளை திபெத்நீர்வாகம் அப்புறப்படுத்தியுள்ளது. இப்போது மழைகாலம் என்ற போதிலும், மழை குறைவாகப் பெய்து வருவதால் இன்னும் 2 வாரகாலத்திற்கு குளத்தில் உடைப்பு ஏற்படாது. ஆனால் அதன்பிறகு நிச்சயம் ஒரு நாள் உடைப்பு ஏற்படும் என்று நம்பப்படுகின்றது.

" குளத்தின் நிலைமை எங்களுக்கு கவலை அளிக்கிறது. இது தொடர்பாக நாங்கள் இந்தியாவுடன்அடிக்கடிதொடர்பு கொண்டு பேசி வருகிறோம்" என சீன அதிகாரி ஒருவர்கூறினார்.

# ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இளைஞர் தூக்கிலிட்டுக் கொலை

ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தில் இளைஞர் ஒருவரை சித்திரவதை செய்து பின்னர் ஒரு மரத்தில் தூக்கிலிட்டுக் கொன்றனர் தீவிரவாதிகள் தோடா மாவட்டம் கோவலூ கிராமத்தைச் சேர்ந்த சஞ்சார் சந்த் என்ற இளைஞரை அவரது வீட்டில் இருந்து திங்கட்கிழமை இரவு தீவிரவாதிகள் பிடித்துச் சென்றனர்.கிராமத்துக்கு அருகே உள்ள காட்டுப் பகுதியில் நிறுத்தி வைத்து அவரை சித்திரவதை செய்தனர். பின்னர் அங்கிருந்த மரத்தில் அவரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.இத்தகவலை பொலிசார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்

# மத நல்லிணக்கத்தைக் கெடுப்பவர்களை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் - வைகோ

மத நல்லிணக்கத்தைக் கெடுக்க நினைப்பவர்களைப்புறக்கணிக்க வேண்டும் என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார். மறுமலர்ச்சி நடைப் பயண விளக்கப் பொதுக்கூட்டம் அறந்தாங்கியில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இதில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவிக்கும் போது, நாட்டில் சாதி, மதச் சண்டைகள் அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம் விட்டுக் கொடுத்துப் போகும் தன்மை இல்லாதது தான். சாதி, மத மோதல்களால் பாதிக்கப்படுவது குழந்தைகளும், பெண்களும் தான். நாட்டில் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தினர் சகோதரர்களாய் பழகி வருகின்றோம். இந்த நல்லிணக்கத்தைக் கெடுக்க நினைப்பவர்களை நாம் புறக்கணிக்க வேண்டும்.நான் பொடோக் கைதியாக 19 மாதங்கள் சிறையில் இருந்தேன். மக்களவைத் தேர்தலில் சனநாயக முற்போக்குக் கூட்டணி 40 இடங்களை வெல்வதற்கு நானும் ஒரு காரணம் என ஒருபத்திரிகை ஆய்வுக் கட்டுரை வெளியிட்டது. தமிழக அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். நதி நீர் இணைப்பு மட்டுமே தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு என்றார் வைகோ.

# கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,பரந்தன் (வ/து)

பதிவு இல:- பிர-047 பதிவு திகதி :-1971. 02. 10

41 ஸ்ரீ 7959 இக்கு நல்ல நிலையிலுள்ள பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

**2004. 09. 09**

நல்ல நிலையிலுள்ள எமக்குச்சொந்தமான 41ஸ்ரீ7959 இலக்க பாரவூர்தியினைப் பகிரங்க ஏல விற்பனை மூலம் 2004,09.09 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பரந்தன் சந்தியில் உள்ள தலைமை அலுவலகத்தில் விற்பனை செய்யவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்பியவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிப்பு வைப்பு ரூபா ஆயிரம் (1000/=)செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றிருத்தல் வேண்டும்.

2004.08.25 ஆம்திகதிதொடக்கம் 2004.09.03 ஆம் திகதி வரை பரந்தன் சந்தியிலுள்ள தலைமை அலுவலகத்தில் மேற்படி பாரவூர்தியைப் பார்வையிடலாம்.

தலைவர், கரைச்சி வடக்கு
ப.நோ.கூ.ச பரந்தன்.

(சி.9792)

# 3 இந்தியர்களும் பத்திரமாகவுள்ளனர் குவைத் நிறுவனம் தெரிவிப்பு


(புதுடில்லி)

"ஈராக்கில் தீவிரவாதிகள் பிடியிலுள்ள மூன்று இந்தியர்களும் பத்திரமாக உள்ளனர்'' என்று கே.ஜி.எல்.நிறுவனம் அறிவித்துள்ளது.ஈராக்கில் உள்ள கே.ஜி.எல் போக்குவரத்து நிறுவனத்தில் ஓட்டுனர்களாக பணிபுரிந்த இந்தியர்கள் மூன்று பேர் உட்பட ஏழு பேரை "கறுப்புக் கொடி" என்று தீவிரவாதிகள் குழு கடத்திச் சென்றது. தீவிரவாதிகளிடம் பிணைக் கைதிகளாக உள்ளவர்களை மீட்கும் பணிதொடர்ந்து நடந்து வருகிறது.

இது குறித்து குவைத் மற்றும் கல்ப்லிங்க் போக்குவரத்து நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளரான அபுசைனா கூறியதாவது, அந்தர்யாமி, சுக்தேவ்சிங் ஆகியோரின் உறவினர்களிடம் தொலைபேசி மூலம் பேசினோம் பிணைக் கைதிகளை பாதுகாப்பாக மீட்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. தீவிரவாதிகளின் பிடியில் உள்ள பிணைக் கைதிகள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்.இதை ஈராக்கில் உள்ள எங்கள் நிறுவனத்தின் நண்பர்கள் மூலம் தெரிந்து கொண்டோம். பிணைக் கைதிகள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்று சொல்லமுடியாது இந்தப் பிரச்சினை மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்று முயற்சி செய்கிறோம்.இவ்வாறு அபுசைனா கூறினார்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 17 10 1943



விண்ணில் 21 07 2004

திதி 20.08.2004

## அமரர் சைவப்புரவலர் குலபதி ஆறுமுகம் கந்தையா (J.P)

(அஷ்டலக்ஷ்மி அதிபரும், கைதடி சைவச்சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரும்)

21. 07. 2004ஆம் திகதி இவ்வுலகைவிட்டுச் சென்ற எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கின் போது நேரடியாகவும், தந்தி தொலைபேசி, மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள், அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்ட நண்பர்கள், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய நண்பர்கள் மற்றும் பத்திரிகைகளில் இரங்கல் செய்தி வெளியிட்ட வர்த்தகப் பெருமக்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் 20.08.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு -13 விவேகானந்தா வீதி, இலக்கம் 130ல் உள்ள லிற்றில் பிறின்ஸ் பிளாஸா மண்டபத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையின் பின்பு நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 22. 08. 2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைதடி கிழக்கு வீரகாளி அம்மன் ஆலயத்தில் அன்னாரது நினைவாக விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறும். அதன் பின்பு கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் அன்னாரது உருவச்சிலை பி.ப. 3மணிக்கு திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

அஷ்டலக்ஷ்மி, 320 செட்டியார்தெரு, கொழும்பு - 11
தொலைபேசி இல. 0112-334004

(சி-10126)

தகவல்:- மருமகன் செ. முரளிதரன்

# 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 08 - 04 - 1964



தாயக மண்ணில் 19 - 08 - 1989

## கப்டன் வண்ணன்

[சீவரத்தினம் கலைஜீவன்]

ஆண்டுகள் உருண்டோடி என்ன.
உன் நினைவுகள்! அகலுதில்லையே
மண்ணிற்கு மைந்தனாகி மாவீரனானாயே.
தமிழ் வீரம் என்றும் செத்ததில்லையே.
ஆதலால் தானோ என்னவோ...
உன்னுடன் ஆயிரமாயிரமாய் திரண்டெழுந்து
சாதித்துக் காட்டினரோ.
இன்றல்ல என்றுமே - எம் மண்ணை
அடிமைகொள்ள் எவராலும் இயலாது
வண்ணா! உன் நினைவுகள் சுமந்து
இன்றும் நாம்...

உன் நினைவுகளுடன்....

மு.சீவரத்தினம் குடும்பத்தினர்,
இல: 56 கனகபுரம்,
கிளிநொச்சி.

(4974)

# தந்தையும் மகனும் 'தங்கம்'



ஒரு நாடு ஒரு தங்கப் பதக்கம் பெற்றாலே பெருமை. பதக்கம் பெற்றதற்காக அவர் குடும்பத்தினரும் எவ்வளவு சந்தோசம் அடைவார்கள். தவிர ஒரே குடும்பத்தில் தந்தை பெற்ற தங்கத்தை மகனும் பெற்று வந்திருக்கிறார் என்றால் இன்னும் கேட்கவா வேண்டும்.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட டுள்ளது. ஜப்பான் ஜிம்னாஸ்டிக் வீரர் நயோயா சுக்ககாரா தங்கம் பெற்றுள்ளார்.

1968,1972 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் அவர் தந்தை மிட்சுவோ ஜப்பான் அணி சார்பில் தங்கப் பதக்கங்களை அள்ளினார். இவர் தந்தையைப்போலவே நயோயாவும் அணி சார்பில் பதக்கத்தைப் பெற்றுள்ளார். 2ஆம் உலகப் போருக்குப்பின்னர் ஒலிம்பிக்கில் தந்தையும் மகனும் பதக்கங்கள் பெற்றது இல்லை. இந்த பிரிவில் ஜப்பான் 1984இற்குப் பிறகு தங்கம் பெறவில்லை. அக்குறையை நயோயா தீர்த்துள்ளார்.

# 100 தங்கம் வென்று ஜப்பான் சாதனை

நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்தது முதல் நேற்று வரை 100 தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது ஜப்பான் அணி.

முதல் இடத்தில் அமெரிக்கா இருக்கின்றது. 900 இற்கும் மேற்பட்ட பதக்கங்களைப் பெற்றுள்ளது. ரஷ்யா இரண்டாவது இடத்தில் 500 தங்கங்களுடனும் மூன்றாவது இடத்தில் ஜேர்மனி 400இற்கும் மேல் பதக்கங்களைப் பெற்றுள்ளன.

இதேவேளை எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் ஐந்தாம் நாளான நேற்றுத் தொடர்ந்தும் சீனா 10 தங்கங்கள் உட்பட 19 பதக்கங்களுடன் முதல் இடத்திலும், மிகவும் பின் தங்கியிருந்த அமெரிக்கா தொடர்ச்சியாக முன்னேறி 7 தங்கங்கள் உட்பட 22 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அவுஸ்திரேலியா மூன்றாவதுஇடத்திற்குத்தள்ளப்பட்டுள்ளது. 6 தங்கம் உட்பட 14 பதக்கங்கள் பெற்றுள்ளது. ஜப்பான் 6 தங்கம் உட்பட 9 பதக்கங்களுடன் நான்காவது இடத்திலும் தொடர்ந்து பிரான்ஸ், உக்ரேன், ரஷ்யா, இத்தாலி, கிரிஸ், ருமேனியா, துருக்கி அணிகளும் முறையே 5, 6, 7, 8, 9, 10, 11 ஆவது இடங்களைப் பெற்றுள்ளன.



பெண்களுக்கான ஜூடோ போட்டியில் பெல்ஜிய வீராங்கனை கத்தரின் ஜக்ஸை வீழ்த்தும் ஜப்பானிய வீராங்கனை மாசேஉயினோ.




பெண்களுக்கான தனிநபர் கத்திச்சண்டைப் போட்டியில் இத்தாலிய வெலன்ரீனா வெசலி, வெனிசுலாவைச் சேர்ந்த மரியானா கொன்சலியைத் தோற்கடித்ததன் பின் சத்தமிடுகின்றார்.




சீனாவிற்கும் ஸ்பெயினிற்கும் இடையிலான ஹொக்கிப் போட்டியின் போது கூர்ந்து அவதானிக்கும் சீனாவைச்சேர்ந்த இலக்குக் காப்பாளர் நைஜாலி.



பெண்களுக்கான தனிநபர் அம்பெய்தல் போட்டியில் பிரித்தானியாவைச் சேர்ந்த அலிசன் வில்லியம்சன்.




பெண்களுக்கான குழு உடற் பயிற்சி இறுதிப்போட்டியில் சமனிலைக்கோலின்மீது ருமோனியாவைச் சேர்ந்த கத்தலினா போனர். இதில் ருமோனியா தங்கப்பதக்கத்தையும், அமெரிக்கா வெள்ளிப்பதக்கத்தையும், ரஷ்யா வெண்கலப்பதக்கத்தையும் வென்றன.



கரப்பந்தாட்ட ஆரம்பப் போட்டியில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய, ரஷ்யவீரர்கள்

# டெஸ்ட், ஒரு நாள் போட்டியில் முரளிக்கு சிறந்த வீரர் விருது



ஐ.சி.சி.யினால் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி வழங்கப்படும் விருதுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு வருடத்திற்கான நான்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் ஒரு நாள், டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணியின் முரளிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் ஒரு நாள் போட்டியில் சமிந்தவாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உலகின் ஏராளமானோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்தியாவின் வி.வி.எஸ். லக்ஷ்மன், சச்சின் டெண்டுல்கர் ஆகியோரும், அவுஸ்.அணியில் 7 வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

டெஸ்ட் போட்டியைப் பொறுத்து சிறிலங்கா அணி சார்பில் முரளிதரனுக்கு மாத்திரமே இடம் கிடைத்துள்ளது.

இந்திய அணி சார்பில் ராகுல் ராவிட், வி.வி.எஸ். லக்ஷ்மன், சேவாக் ஆகியோருக்கு இடம் கிடைத்துள்ளது. இதில் கவலையான விடயம் உலகின் தலை சிறந்த கிரிக்கெட் வீரர் என்று போற்றப்படும் சச்சின் டெண்டுல்கருக்கு டெஸ்டில் இடம் கிடைக்கவில்லை என்பது தான்.

# கென்ய வீரர் மொறிஸ் உடும்பேக்கு ஐந்து வருட கிரிக்கெட் தடை

கென்ய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மொறிஸ் உடும்பே ஐந்து வருடங்களுக்கு கிரிக்கெட் விளை யாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையினைச் சர்வதேச கிரிக்கெட் பேரவை விதித்துள்ளது.

2002ஆம் ஆண்டு சனவரி, ஒக்ரோபர் மாதங்களில் 5000 அமெரிக்க டொலர்களைப் போட்டிகளை விட்டுக் கொடுப்பதற்காக பந்தயக்காரர்களிடம் இருந்து வாங்கியதாகவும்,


இது உறுதி செய்யப்பட்டதை அடுத்து இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய பந்தயக்காரர்களுடனேயே இவர் பந்தயத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.






பெண்களுக்கான 200மீற்றர் நீச்சல்போட்டியில் பங்கேற்கும் ஜப்பானின் வீராங்கனை மஸாமிடனகா.



அமெரிக்காவைச்சேர்ந்த மைக்கல் பிலிப் ஆண்களுக்கான 200மீற்றர் பட்டபிளை நீச்சலில் தங்கப்பதக்கம் பெற்றபின் தனது குழுவினரை வாழ்த்துகின்றார். இவர் இத்துடன் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.



குண்டு தள்ளுதல் போட்டியில் கலந்து கொள்ளும் ஸ்பெயின் வீரர்

# இறுதிப்போட்டியில் கடும் நெருக்கடி உயிர் போய் உயிர் வந்தது

## வெள்ளிப்பதக்கம் வென்ற ரதோர்



இறுதிப் போட்டியில் ஏற்படும் கடும் நெருக்கடியில் 100 தடவைக்கு மேல் உயிர் போய் உயிர் வந்தது போன்ற மனநிலை இருந்தது என்று வெள்ளிப் பதக்கம் வென்ற ராஜியவர் தன்சிங் ரதோர் நெகிழ்ச்சியுடன் கூறினார்.


வெள்ளிப் பதக்கம் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 5 ஆவது நாளான நேற்று முன்தினம் நடந்த




துப்பாக்கி சுடுதலில் ஆண்கள் 'டபுள் டிராப்' பந்தயத்தில் இந்திய வீரர் ராஜியவர்தன்சிங் ரதோர் வெள்ளிப்பதக்கம் வென்றார். இதன் மூலம் பதக்கப்பட்டியலில் இந்தியா தனது கணக்கைத் தொடங்கியது. இந்த வெற்றியின் மூலம் ராஜியவர்தன்சிங் ரதோர் ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

போட்டி முடிந்ததும் ராஜியவர்தன்சிங் ரதோர் கூறியதாவது:- எனக்கு இலேசான பதட்டம் ஏற்பட்டது உண்மைதான். இறுதிப் போட்டியில் நிலவிய நெருக்கடியில் 100 தடவை எனக்கு உயிர் போய் உயிர் வந்ததுபோல் இருந்தது. ஆனால் இறுதியில் எல்லாம் நல்லபடியாக முடிந்தது. நான் கடினமாக உழைத்தேன். வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அது நடந்தது. கடவுளுக்கு நன்றி என்றார்.

# 200 மீற்றர் வட்டப் பிளே நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் புதிய ஒலிம்பிக் சாதனை



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 200மீற்றர் வட்டப்பிளே நீச்சல் போட்டியில் புதியஒலிம்பிக் சாதனையை அமெரிக்க.வீரர் மைக்கல் பப்ஸ் நிலைநாட்டியுள்ளார்.

இவர் சகநாட்டு வீரரான தோமஸ் மல்கோவின் சாதனையையேமுறியடித்துள்ளார்.


வெள்ளிப்பதக்கத்தை வென்ற ஜப்பானிய வீரர் மோடொ 1நிமிடம் 54.5 வினாடிகளில் தமது இலக்கை அடைந்தார். மூன்றாவது இடத்தை பிரித்தானிய வீரர் இயனஹரி கைப்பற்றினார். மற்றுமொரு 200மீற்றர் பெண்களுக்கான வட்டப்பிளே நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கத்தை ருமேனியா கைப்பற்றியுள்ளது. இப்போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை லித்வெனியாகவும் போட்டியின் ஆரம்பம்முதலே இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. எனினும் இறுதியாக ருமேனிய வீராங்கனை 1நிமிடம் 53.3 வினாடிகளில் முதல் இடத்தைப் பெற்றார்.

# யாழ். இல் கால் பந்து பயிற்சித் திட்டம்

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி செயற் திட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.எதிர்வரும் 23, 24, 25ஆம் திகதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இப் பயிற்சிச் செயற்றிட்டத்தில் துறைசார் வல்லுநர்கள் பயிற்சிகளையும், விளையாட்டு நுட்பங்களையும் பயிற்றுவிக்கவுள்ளனர். இதில் 15, 17, 19 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை அணிகளின் வீரர்கள் பங்கு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)



ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் புரதான ஒலிம்பியா நுழைவாயினூடாக நடந்து செல்கின்றனர்.




பெண்களுக்கான இரட்டையர் பூப்பந்தாட்ட காலிறுதிப் போட்டியில் சாங்ஜெய்வென் (வலது) ஜங்வெய், தாய்லாந்தைச்சேர்ந்த சறலி துங்தொங் அவரின் பங்குதாரர் சதினி சங்கரா சங்வொங்கிற் கெதிராகப் போட்டியிடுகின்றனர்.



கத்தி போட்டியில் பங்கேற்கும் இத்தாலிய வீராங்கனை வலன்ரினா வெசல், பிரான்ஸின் வீராங்கனை அடேலின்வுல்லமி.

சிந்தனைக்கு



வீழ்ந்தவர்கள் எல்லாம் விதையாகிப் போனதால் தான் விடுதலைப் போர் இன்றும் தொடர்கின்றது.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 19-08-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

## எச்சரிக்கையல்ல...!

"விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளும் இராணுவத்தை அனுப்பத் தயங்கமாட்டேன" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் அவர் மீண்டும் ஒரு தவறான முடிவிற்கும் தப்பான மதிப்பீட்டிற்கும் வந்துள்ளாரோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. அவ்வாறு ஏதும் நிகழ்ந்திருப்பின் அவர் அதனைத் திருத்திக்கொள்ளுதல் அவசியமானதாகும். அல்லாவிடில் எதிர்காலத்தில் அவரது நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகளுக்கு அவரே பொறுப்பேற்க வேண்டிவரும்.

சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது கூட்டணியினரோ யுத்தத்தைப் பற்றிப்பேசுவதில் சற்று ஆர்வம் காட்டுவதாகவே தெரிகின்றது. ஒருவர் போருக்கும் தயார், சமாதானத்திற்கும் தயார் என்கின்றார். இன்னொருவர் இராணுவம் போரிடத்தயாராகவுள்ளது என்கின்றார்.இந் நிலையிலேயே சனாதிபதியும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தை அனுப்பத் தயார் என்கிறார்.

சிங்கள ஆட்சியாளர்கள் போர் முழக்கம் செய்வதும், சவால்கள் விடுவதென்பதொன்றும் புதியதொன்றல்லத்தான் ஆனால், கடந்த ஓரிரு வருடங்களில் இது சற்று தணிந்திருந்தென்றே கூற வேண்டும். ஏனெனில் சிறிலங்கா அரசோ, அதன் படைப்பிரிவுகளோ போரிடக்கூடிய நிலையில் இருக்கவில்லை. யுத்தத்தில் அவை களைத்துப்போயிருந்தன.

ஆனால் கடந்த இரண்டரை வருடங்களாக நடைமுறையிலிருக்கும் யுத்தநிறுத்தம் சிறிலங்கா அரச தரப்பிற்கும், ஆயுதப்படைத்தரப்பிற்கும் சற்று "குளிர்விட்டுப் போகச் செய்துவிட்டது "போல் தெரிகின்றது. அதாவது கடந்தகால கசப்பான அனுபவங்களை இவை மறந்துபோய்விட்டன போல் உள்ளது. ஏனெனில் அவை ஞாபகத்திலிருப்பின் யுத்த முழக்கம் செய்யப்படுவது குறைவாக இருக்கக் கூடும்.

அவ்வாறு இல்லாது விடில் யுத்த நிறுத்தகாலத்தில் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அவை திருப்தியுற்றிருத்தல் வேண்டும். அதாவது இவ் இரண்டரை வருட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக்கொள்வனவு, போர்ப்பயிற்சி நடவடிக்கைகள், படையணிச் சீரமைப்பு, ஆளணிச் சேர்ப்பு நடவடிக்கைகளில் திருப்திபட்டிருத்தல் வேண்டும். இவை யுத்தத்திற்கு ஆயுதப் படைத்தரப்பு தயாராகி விட்டது. என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுத்தியிருத்தல் வேண்டும்.

இதற்குமப்பால் யுத்தமொன்று மூண்டால் சில நாடுகளிலிருந்து இராணுவ ரீதியிலான ஆதரவு கிட்டுமென்ற நம்பிக்கையும் அரசிற்கு ஏற்பட்டிருக்கக் கூடும்.ஏனெனில் சமாதான காலத்தில் சிறிலங்கா அரசிற்கு இராணுவ ரீதியிலான உதவிகள் அதிகளவில் கிடைக்கப்பெற்றிருந்தமையும் சில அரசுகள் பாதுகாப்பு உடன்பாடுகள் செய்துகொள்ளத்தயாராகி இருந்தமையும் இந்நம்பிக்கையை வளர்த்திருக்கக் கூடும்.

இதனைத் தவிர கருணா ஏற்படுத்திய குழப்பமானது விடுதலைப் புலிகளை வெகுவாகப் பலமிழக்கச் செய்துள்ளதாகவும் புலிகளின் போரிடும் பலம் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் அரசதரப்பு முடிவிற்கு வந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இத்தகைய காரணிகள் சனாதிபதி சந்திரிகாவிற்கு இராணுவ ரீதியிலான தீர்வில் மீண்டும் நம்பிக்கையை கொடுத்திருக்கலாம்.

இவையனைத்திற்குமப்பால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு யுத்தத்தைத் தவிர வேறு வழி இல்லாதும் இருத்தல் கூடும். ஏனெனில் இன்று சிறிலங்கா எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசிற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுதல் என்பது தவிர்க்க முடியாததொன்றாகியுள்ளது. இந்நிலையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் உள்நாட்டில் மக்கள் மீது சுமத்தப்படும் அனைத்து சுமைகளுக்கும் யுத்தத்தைக் காரணமாக்கி விடமுடியும். அரசிற்கு எதிரான போராட்டங்களை யுத்தத்தைக் காரணம் காட்டி தடுத்து நிறுத்தி விடவோ அன்றி யுத்தத்திற்கெதிராகத் திசை திருப்பி விடவோ முடியும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தனது அரசியல் அபிலாசைகள் காரணமாக மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடங்குவாரே யானால் அதற்காக அவர் இறுதிக் காலத்திலாவது தனது நாட்டிற்கும், மக்களுக்கும் செய்த துரோகத்திற்காக வருந்தவேண்டி வரும். இதேவேளை இத்தகைய நடவடிக்கைகளுக்காக சிங்களதேசம் இறுதி வரை அவரை மன்னிக்கவும் மாட்டாது.

ஏனெனில் இனி ஒரு யுத்தம் தொடங்குமேயானால் தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவுகளும், அபிலாசைகளும் நிறைவேறுவது தடுக்கப்பட முடியாததொன்றாகவே இருக்கும். இதேவேளை சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும் இதுவரையில் சந்திக்காத அரசியல்-இராணுவ ரீதியிலான தோல்விகளுக்கு முகம் கொடுப்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

இது அரச தரப்பிற்கு விடுக்கப்படும் மிரட்டலோ அன்றி எச்சரிக்கையோ அல்ல. அரசியல் யதார்த்தம் இதற்கே இட்டுச் செல்வதாக இருக்கும் என்ற எதிர்வு கூறலே ஆகும். அதாவது தமிழ் மக்களுக்கென ஒரு அரசு அமைவதற்கான கால எல்லையை திட்டவட்டமாகத் தெரிவிக்கமுடியாதேயொழிய அது விரைவில் உருவாவதை தடுத்து நிறுத்துதல் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

—இடைக்கால நிர்வாக யோசனையை கொளுத்துவோம் —

# 4500 கோடி நிதியுதவிக்காக நாட்டை காட்டிக்கொடுக்கோம்

## பசி,பட்டினி கிடந்தாவது தடுப்போம் என்கிறார் விமல்வீரவன்ச

4500 கோடி ரூபா நிதியுதவிக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்கோம். பசி, பட்டினி கிடந்தாவது இடைக்கால நிர்வாகசபை உருவாவதைத் தடுப்போம். தாய் நாடே எமக்கு உயர்வானது. அதற்குப் பின்னர் தான் சமாதானமும் அரசாங்கமும் எனத் தெரிவிக்கும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, நாட்டைப் பிரித்து தனிநாட்டை உருவாக்கும் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனையை தீயிட்டுக் கொளுத்தும் தீர்க்கமான காலம் வந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் "உண்மையான சமாதானத்தின் எதிரிகள் யார்?" என்ற தலைப்பில் இடம்பெற்ற பகிரங்க சொற்பொழிவின் போதே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார். இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் புலிகளுடன் பேசுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சர்வதேசம், புலிகள் மற்றும் அரச சார்பற்ற புலிகள் இன்று அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் இடைக்கால நிர்வாக சபையை வழங்குங்கள். அதன் பின்னர் பேசலாம் எனப் புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளனர்.இந்த யோசனைக்கமைய பேசுவதும் அதனை வழங்குவதும் தனித் தமிழீழத்தையே உருவாக்கும். அதற்குப் பிறகு பேசுவதற்கு ஒன்றுமில்லை. எல்லைகளை வகுப்பதையும் இரு நாடுகளுக்கிடையே பஸ் விடுவோமா என்பது தொடர்பிலும் பேச வேண்டிவரும்.இது மிகவும் பயங்கரமானது. இலங்கைக்குள்ளேயே இன்னொரு சமாந்தரமான நாட்டை உருவாக்கும் யோசனையாகும். எனவே, தீர்க்கமான முடிவெடுக்கும் காலம் வந்து விட்டது. இடைக்கால நிர்வாக சபை யோசனையை தீயிட்டுக் கொளுத்த வேண்டும். பசி, பட்டினியோடிருந்தாவது இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். 4,500 கோடி ரூபா நிதியுதவிக்காக நாட் டைக் காட்டிக் கொடுத்து பிரிப்பதற்கு நாம் ஒருபோதும் துணைபோக மாட்டோம். எமது நாட்டிற்குள் உள்ள தானியங்களை உண்டு பசி, பட்டினி இருந்தாவது இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். பேச்சுவார்த்தைகளை இந்த யோசனையின் அடிப்படையில் ஆரம்பித்தாலே போதும். அதிலிருந்து மீட்சி கிடைக்காது. தனிநாடு உருவாவது நிச்சயப்படுத்தப்பட்டுவிடும். அதற்காகவே புலிகளும் அவர்களது அடிவருடிகளும் இதற்காகவே முயன்று வருகின்றனர்.நாட்டில் நூறில் 4 வீத தமிழர்களுக்காக தனியான இராணுவம், பொலிஸ், நீதித்துறை, கடல் வளங்கள் உட்பட அனைத்தையும் வழங்கி இடைக்கால நிர்வாக சபையென்ற போர்வையில் தனிநாட்டைக் கொடுக்க முடியாது. வெளிநாட்டுக் கடனுக்காக நாட்டை அடிமைப்படுத்த முடியாது. அந்நிய நாடுகளின் பொருளாதார, சமூக ஆக்கிரமிப்பிலிருந்து மலேசியாவை அன்று மஹதீர் முஹம்மத் பாதுகாத்து நாட்டை உயர்த்தி இன்று தனித்துவத்துடன் அபிவிருத்தியடைந்த நாடாகத் திகழச் செய்துள்ளார். அந்தத் தைரியம், தன்னம்பிக்கை எமக்கு வேண்டும். எமது நாட்டு வளங்களைக் கொண்டு முன்னேறி புலிகளினதும் அவர்களது ஆதரவாளர்களினதும் சவால்களை தோல்வியடையச் செய்ய வேண்டும்.

யுத்த ரீதியிலான பின்னடைவை நிவர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால், அரசியல் ரீதியான பின்னடைவையும் அடிமைத்தனத்தையும் மீண்டும் நிவர்த்தி செய்து கொள்ள முடியாது. அந்த மீளமுடியாத பின்னடைவை ரணில் விக்கிரமசிங்கவே ஏற்படுத்தினார். இன்று அதற்குள் சிக்கிக் கொண்டு தான் தவிக்கின்றோம். எனவே, இடைக்கால நிர்வாக சபையை ஒரு போதும் வழங்குவதற்கோ அல்லது அதுபற்றி பேசுவதற்கோ நாமனைவரும் ஒன்று திரண்டு எதிர்ப்புகளை வெளியிட வேண்டும். பிரதான எதிரியான புலிகளைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் அரசின் சமாதானச் செயலகத்தில் ஜயந்ததனபால நாமும் எமது யோசனைகளை முன்வைக்க உள்ளதாகக் கூறியதாக சிலர் கூறுகின்றனர். இது போன்ற எந்தவோர் அரசியல் தீர்மானத்தையும் ஐ.ம.சு கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை. அரசின் நடவடிக்கைகளுக்கு தொழிலாளர் மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்க முன் வந்தவோர் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ள இயலாது. அதற்கான அதிகாரமும் இல்லை. இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுப்பாராளாயின் ஐ.ம.சு. கூட்டமைப்பைச் சேர்ந்த அனைத்துக்கட்சித் தலைவர்களினதும் இணைக்கப்பாட்டின் பேரிலேயே இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுக்கமுடியும்.

அதாவது தற்போது அவர் இவ்வாறான கருத்து ஒன்றைக் கூறியுள்ளார். இக் கூற்றிற்கு புலிகள் இன்று என்ன கூறியுள்ளனர்? இல்லை எமக்கு இவ்வாறான யோசனை தேவையில்லை. இடைக்கால நிர்வாகசபை வழங்கினால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு முன்வருவோம், வேறு எதனையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த இயலாதெனக் கூறுகின்றனர். இடைக்கால நிர்வாகத்தை வழங்கிய பின்னர், பேசுவதற்கு என்ன உள்ளது என மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசின் இ.நி.யோசனை குறித்து பாராளுமன்றில் விளக்கமளிக்க வேண்டும்

## ஜாதிக ஹெலஉறுமய வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான செயலர் ஜயந்த தனபால அண்மையில் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியது அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தனதேரர் இது தொடர்பில் விளக்கம் அளிக்க வேண்டுமென அரசாங்கக் கட்சியினரைக் கேட்டுக் கொண்டார். தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு மாற்றாக அரசாங்கமும் இடைக்கால நிர்வாக யோசனை ஒன்றைத் தயாரித்து வருவதாக ஜயந்த தனபால கூறியமையானது, அரசாங்கம் தமக்கு சமமான நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளை கருதுகிறதா? என சந்தேகம் கொள்ளவைத்துள்ளதாக அத்துரலியே ரத்தன தெரிவித்தார். அதேநேரம் அரசாங்கம் முன்வைக்கும் யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தமது யோசனை தொடர்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் வாரத்தில் வெளிப்படுத்தப்படும் என தெரிவித்தார். (32)

# 1990 ஆம் ஆண்டு மட்டு. வன்முறைகளுக்கு இதுவரை இழப்பீடுகள் வழங்கப்பட வில்லை

## மட்டு மாவட்டப் பா. உ தங்கேஸ்வரி

(கொழும்பு)

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு இதுவரை இழப்பீடுகள் வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார்.இந்த வன்முறையின் போது ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் ஐரேப்பியா நிறுவனம் தகவல்களைச் சேகரித்துச் சென்று 15 வருடங்களாகியும் இது வரை இழப்பீடுகள்வழங்கவில்லை. அண்மையில் ஊடக இதழ் ஒன்றில் வெளியான செய்தியில் இந்த வன்முறைகளுக்கான நட்டஈடுகளை வழங்கப்போவதாக சனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது எனினும் இழப்பீடுகள் அறிவிக்கப்பட்ட கடிதம் அனுப்பட்டு கடிதங்கள் மீண்டும் குறிப்பிட்ட ஆணைக்குழுவுக்கு திரும்பி வந்துள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது கடந்த 15 வருடங்களாகக் குறிப்பிட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் தற்சமயம் எங்கிருக்கிறார்கள் என்பது கூட தெரியாது.

இந்த நிலையில் தமது தாமதங்களுக்கு அரசாங்கம் கூறும் பதில் என்னவாக அமையப்போகிறது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். (32)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் பாராமுகம்

# இரு நாடுகள் இருப்பதை ஜே.வி.பி ஏற்கிறது

பாராளுமன்றத்தில் சிவாஜிலிங்கம்

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியில் ஜே. வி. பி. யின் அமைச்சுக்கள் பாராமுகமாகயிருப்பதும் திட்ட மிட்டுப் புறக்கணித்து வருகின்றமையும் இருநாடுகள் இருக்கின்றதென்ற உண்மையை ஜே. வி. பி. யும் ஏற்றுக் கொண்டுள்ளதனை தெளிவுபடுத்துவதாக பாராளுமன்ற உறுபபினர் என். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.அதற்காக தாம் நன்றி கூறுவதாகவும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள் ளார். நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கலந்து கொண்ட அவர் வெளிநாட்டவர் காணிகள் வாங்க முடியாது என்ற சட்டமூலம் கொண்டு வந்தமை தமிழ் மக்களை வஞ்சிக்கும் செயல் எனத் தெரிவித்தார்

பெருமளவு இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றுயிருப்பதை அவர் சுட்டிக் காட்டியதுடன் இந்த நடைமுறை தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியைப் பாதிக்குமெனத் தெரிவித்துள்ளார். இதேவேளை சுதேசக் கொள்கை பற்றிப் பேசும் தற்போதைய அரசாங்கம் ஏற்கனவே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட பிறீமா ஆலை, எயாலங்கா, புத்தளம் சிமெந்துத் தொழிற் சாலை என்பவற்றை மீளப் பெறமுடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

வெளிநாட்டவர்கள் இந்த நாட்டில் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்களுக்குநூற்றுக்கு நூறு வீதம் வரி செலுத்தும் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரும் அதேநேரம், வடக்கு கிழக்கில் இராணுவத்தினர் தமிழ்மக்களின் காணிகளில் அத்துமீறி இருப்பதற்கு வரி எதனையும் செலுத்தவில்லை என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# வாக்களிப்பிற்கு அ.அ.கோருவது தமிழ் மக்களைப் பாதிக்கும்

அரசியல் சட்ட ஆய்வாளர் தமிழ்மாறன்

வாக்காளர் வாக்களிக்க வரும் போது அடையாளஅட்டையுடன் வரவேண்டும் என்பது கட்டாயமாக் கப்படுவது தமிழ் மக்களைப் பாதிக் கும் என அரசியல் சட்ட ஆய் வாளர்வி.ரி.தமிழ்மாறன் பி.பி.ஸிக் குத் தெரிவித்தார்.

வாக்காளர் வாக்களிக்கும் போது தேசிய அடையாள அட்டை யைப் பயன்படுத்துவது கட்டாய மாக்கப்படுவது தொடர்பான ஆலோ சனையை ஆளும் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசு முன்வைத் துள்ளது.

இந்த உத்தேசக் கூட்டத்தின் சட்ட ரீதியான, குறிப்பாக அரசியல் சட்ட ரீதியான விளைவுகள் என்ன?

போர் சமூகத்தில் இத்தகைய தொரு நடவடிக்கை சிறுபான்மைச் சமூகத்தில் எவ்வாறு பார்க்கப்படும் என்பது குறித்து கொழும்பிலுள்ள அரசியல் சட்ட ஆய்வாளர் பேரா சிரியர் வி.ரி.தமிழ்மாறன் கூறுகையில்;

இதனை இரண்டு முக்கிய விட யங்களுக்காகப் பார்க்கவேண்டும்.

ஒன்று சனநாயகப் பாரம் பரியம், சனநாயக முறைமை களை உறுதிசெய்வதற்காக தேர் தல் மோசடிகள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக அடையாள அட் டையைப்பாவித்தல் என்ற நோக்கில் பார்க்கின்றபோது அது சனநாய கத்தை உறுதிப்படுத்தும் நடவ டிக்கை என்று கூறலாம்.

ஆனால் இன்னொரு புறத்தில் இன்றைய அரசியல் சூழ்நிலையில் இதனால் பாதிக்கப்படப்போகின்ற மக்கள் பிரிவினர் யார் என்று பார்ப் பது இன்னொரு அணுகுமுறை.

இன்று ஒரு முக்கிய பிரச்சினை சிறுபான்மை மக்களைப் பாதிப்ப தாக இருக்கிறது.

குறிப்பாக இரண்டு சொற்ப தங்களாக நடைபெற்றுவரும் யுத்த சூழ் நிலையைப் பொறுத்தவரை

முக்கியமாக இலட்சக் கணக் கான மக்கள் சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்களுக்கு இன்று நிரந்தர வதிவிடம் என்பது கிடையாது.

அதைவிட நாட்டைவிட்டு தற்காலிகமாக வெளியேறியவர் களும் இருக்கிறார்கள்.

இதைவிட இந்த யுத்தச்சூழலில் பிறந்து வளர்ந்து படித்து இன்று வாக்களிக்கத்தகுதி உடையவர் களும் இருக்கிறார்கள்.

அவர்களின் பிறப்பு சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறதா அதற் குரிய அரசாங்கச் செயலகங்கள் உரியமுறையில் பணியாற்றி இருக் கின்றதா என்று பிரச்சினைகளை ஆராய்கின்றபோது

ஆயிரக்கணக்கான மக்கள் அடையாள அட்டையைப் பெறமுடி யாதநிலையில் அதற்குரிய ஆவ ணங்களை சமர்ப்பிக்க முடியாத நிலையிலும் இருக்கிறார்கள் என்றார்.


"கலையின்பமே நிலையின்பமாம்"

முல்லை மாவட்ட

நுண்கலைக் கல்லூரி

ஆவணி மாதத் தமிழிசை விருந்து

காலம் : 21.08.2004 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு

இடம் : புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி கலா மண்டபம்.

நிகழ்ச்சிகள்

மாலை : 4.30 ஈகச்சுடரேற்றல், தேசியக்கொடியேற்றல்,அகவணக்கம்

4.45 : இசையரங்கம்

பாட்டு : இசைக்கலைமணி செல்வி. ஆறுமுகம் ஜனார்த்தனி (இசையாசிரியர்-நவம் அறிவுக்கூடம்)

வயலின் : கலாவித்தகர் செல்வி.க.நஞ்சனா

மிருதங்கம் : கலாவித்தகர் திரு. சதா. வேல்மாறன்

5.30 சிறப்புத் தமிழிசை விருந்து

நிகழ்த்துபவர்கள்

பாட்டு : சங்கீத பூஷணம் திரு.சு.கணபதிப்பிள்ளை (முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்- சங்கீதம் யாழ்.கல்வித்திணைக்களம்)

வயலின் : இசைக்கலைமாணி திரு. குகபரன்

மிருதங்கம் : சங்கீதரெத்தினம் திரு. ம. சிதம்பரநாதன் (முன்னாள் விரிவுரையாளர் - இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

கடம் : கலாவித்தகர் திரு. சதா. வேல்மாறன்

கெஞ்சிரா : கலாவித்தகர் திரு. இரா. சிவராமன்

முகர்சிங் : கலாவித்தகர் திரு. ந. சதீஸ்குமார்

கலை விருந்தருந்த அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி -9795) நுண்கலைக்கல்லூரியினர்


## சிறிலங்கா...

இதேவேளை ஆகஸ்ட் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெய சீலன் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டுள் ளார். ஏனையவர்கள் இது வரை விடுவிக்கப்படவில்லை.

## தேர்தலில்...

கருத்துத் தெரிவிக்கையில்:-

அரசாங்கம் ஒன்று இல்லை அரசிடம் கொள்கை ஒன்று இல்லை தீர்மானங்களை எடுப்பதும் இல்லை, ஒரே குரலாக எழும் பிரச் சினைகள் குறித்து ஆராய்ந்து அதற்கான தீர்வைப் பெறுவதற்கு அரசிடம் எவ்வித பலமும் இல்லை இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பாக மாற்று யோசனைகளைஅரசு முன்வைக்க வுள்ளதாக சமாதான செயலகத் தின் பணிப்பாளர் கூறுகின்றார். இக்கூற்றில் எவ்வித உண்மையும் இல்லையென ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் கூறுகின்றார் பரஸ்பரவிரோதமான கருத் துக்களே இவ் அரசாங்கத்திடம் இருந்து வெளியாகின்றதென தெரி வித்துள்ளார். (32)

# எதென்ஸ் ஒலிம்பிக் - 2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெங்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 10 | 06 | 04 | 20 |
| அமெரிக்கா | 08 | 10 | 08 | 26 |
| ஜப்பான் | 08 | 03 | 01 | 12 |
| அவுஸ்திரேலியா | 06 | 03 | 05 | 14 |
| உக்ரேன் | 05 | 01 | 01 | 07 |
| ரஷ்யா | 03 | 06 | 06 | 15 |
| பிரான்ஸ் | 03 | 02 | 04 | 09 |
| இத்தாலி | 02 | 03 | 02 | 07 |
| கொரியா | 02 | 03 | 02 | 07 |
| கிரிஸ் | 02 | 00 | 01 | 03 |
| ருமேனியா | 02 | 00 | 01 | 03 |
| துருக்கி | 02 | 00 | 01 | 03 |
| நெதர்லாந்து | 01 | 03 | 04 | 08 |
| ஜேர்மனி | 01 | 02 | 04 | 07 |
| கங்கேரி | 01 | 02 | 01 | 04 |
| சிலோவாக்கியா | 01 | 02 | 01 | 04 |
| ஜேறேகியா | 01 | 01 | 00 | 02 |
| பல்கேரியா | 01 | 00 | 02 | 03 |
| தாய்லாந்து | 01 | 00 | 02 | 03 |
| சுவிற்சர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| தென்னாபிரிக்கா | 01 | 00 | 00 | 01 |
| ஐக்கிய அரபு எமிரேட் | 01 | 00 | 00 | 01 |
| வடகொரியா | 00 | 02 | 01 | 03 |
| அஸ்கிரியா | 00 | 02 | 00 | 02 |
| போலந்து | 00 | 02 | 00 | 02 |
| இந்தியா | 00 | 01 | 00 | 01 |

# பொலிசாரின் தாக்குதலில் தொழிலாளி ஒருவர் பலி

நுவரெலிய மத்துரட்ட அல்மா என்ற தோட்டப்பகுதியில் தமிழர் ஒருவர் சிறிலங்கா பொலிசாரின் கைது செய்த பின்னர் உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட தொழிலாளி மது விற்பனை செய்து வருபவர் என்ற வகையில் பொலிசார் அவரை கைது செய்ய முற்படுகையில் வீட்டில் வைத்தே அவர் உயிரிழந்ததாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர் . எனினும் தோட்ட மக்கள் பொலிசாரின் தாக்குதல் காரணமாகவே அவர்களின் வாகனத்தில் குறிப்பிட்டவரின் உயிர் பிரிந்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். (32)

## தலைமன்னார்...

விட்டார் பின் சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட நபர் அடையாளம் காணப்பட்ட போதிலும் இதுவரையி லும் கைது செய்யப்படவில்லை யெனக் கூறப்படுகின்றது. (மி)

## கண்காணிப்புக்...

துள்ளார்.றோலர் படகில் இருந்த பொருட்கள் தொடர்பாக தெளி வான ஆய்வுகளை மேற்கொள்வ தற்கான சந்தர்ப்பம் கிடைக்காமையே இதற்குக் காரணம் எனத்தெரிவித் துள்ளார்.

## தன்னியங்கி...

எனத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட வாவியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் இந்த ஏவுகணைகள் அடங் கிய பெட்டியை மீட்டு அதனுள் இருந்த ஒரு ஏவுகணையை வாவி யில் எறிந்த பின்னர் ஏனைய ஏவு கணைகளை தமது வீட்டுக்கு எடுத் துச் சென்று தமது தோட்டத்தில் புதைத்து வைத்துள்ளார். இந்த ஏவு கணை ஒன்றின் நிறை ஒரு கிலோ என அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்கப் பட்ட இந்த ஏவுகணைகள் தொடர் பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள்னர்.(32)

## புலிகளின்...

முன்னணி சவாலை எதிர் கொள்ள நேரிடும் என தமக்கு தெரிந்திருந்த தாகவும் சனாதிபதி குறிப்பிட்டார். இந்தநிலையில் எந்த ஒரு சவா லையும் சமாளித்து தமது கட்சி வளர்ச்சி பெறும் என்றும் அவர் தெரிவித்தார். சிறி லங்கா சுதந்திர கட்சிக்கு புதிய கட்டடத் தொகுதியை அமைக்கும் நிதியீட்டல் நிகழ்வு ஒன்றில் பங்கு கொண்ட போதே சனாதிபதி இந்த கருத்துக்களை வெளியிட்டார்.(32)

## புகையிரத...

சாங்கத்தைக் கோரியுள்ளது. புகையிரத சேவையை தனியார் மயப்படுத்தத் தீர்மானிக்கப்பட் டுள்ளதாக அச் சங்கத்தினர் கூறினர். ஜே.வி.பி எதிர்க்கட்சியாக இருந்தபோது இதனை வன்மை யாக எதிர்த்தது.ஆனால் நேற்று நடைபெற்ற இப் புகையிரத ஊழி யர் எதிர்ப்பாட்டத்தில் அது கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிய வரு கின்றது.இவ்வெதிர்ப்பாட்டம் மருதானை புகையிரத நிலையத் திற்கு முன்பாக நடைபெற்றுள்ளது. அரசாங்கம் தனியார் கம்பனி களிற்கு விற்பதாயிருந்தால் ஆயி ரக்கணக்கானோர் வேலையை இழக்க நேரிடும் எனவும் அச் சங்கம் தெரிவித்துள்ளது.

## நாட்டுப்...

.பல்கலைக் கழக உடற்கல்வி துறை விரிவுரையாளர் இளம்பிறை, ஊர்காவல்துறை பிரதேச செய லாளர் செல்வநாயகம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் இளம்பரிதி ஆகியோர் நினைவுரையை நிகழ்த்தினர். யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் இளம்பரிதி தனது நினைவு ரையில் நாட்டுப்பற்றாளர் இரத் தினம் அவர்கள் எமது மண்ணு க்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவையை நினைவுகூர்ந்தார். பல் வேறு பட்ட திறமையும் ஆற்றலும் கொண்ட இவரை எமது மண் இன்று இழந்து நிற்கின்றது. இவரது இழப்பு எமக்கு பேரிழப் பாகும். இவரது சேவையையும், அற்றலையும் எமது மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைக் காக எமது தேசியத்தலைவர் அவர்கள் இவருக்கு நாட்டுப்பற்றாளர் எனும் உயர்ந்த அந்தஸ்த்தைக் கொடுத்துக் கௌரவித்துள்ளார் எனத் தனது உரையில் குறிப்பிட்டார்.அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முதலில் யாழ்.நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் மலர் அஞ்சலி செலுத் தியதைத் தொடர்ந்து போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள், பொதுமக்கள் என ஏராள மான மக்கள் அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து அலங் கரிக்ககப்பட்ட ஊர்தியில் அவரது வித்துடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றது. (36)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.